 யூலை 2010 July | இதழ் 234 ISSUE

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION








20 வது ஆண்டு th Year

a monthly information digest
இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

Growing with the Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# இங்கும் முள்வேலியா?

ஈழத்தமிழரின் விடுதலைப் பயணம் ஆறு தசாப்தங்களுக்கும் மேலான வரலாற்றைக் கொண்டது.

இரு வேறு காலப்பகுதியில் இரு வேறு கட்டங்களாக இரு வேறு தலைமைகளில் நடைபெற்ற இந்தப் பயணம், சிங்களப் பேரினவாதத்தினால் சர்வதேசத்தின் துணைகொண்டு முறிக்கப்பட்டுள்ளது.

இதனால், புலம் பெயர்க்கப்பட்ட தமிழர் அடுத்த கட்டப் பயணத்தை மீளுருப்பெற்ற வடிவத்தில் ஆரம்பிக்க நேர்ந்தது காலத்தின் கடமை.

தாயகத்தின் போர்ச் சூழலால் ஏதிலிகளாகக் கடல் கடந்த தமிழர், என்றோ ஒரு நாள் தமது மண்ணினதும் மக்களினதும் விடுதலைக்கான தலைமைப் பொறுப்பைத் தாமே ஏற்க நேருமென்று எண்ணியிருக்க மாட்டார்கள்.

எவ்வாறு திடீரெனப் புலம் பெயர்க்கப்பட்டார்களோ, அவ்வாறே திடீரென இந்தப் பயணத்தைத் தொடரும் பொறுப்பும் இவர்களிடம் வந்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், நாடுகள் ரீதியாக உருவாக்கப்படும் மக்கள் அவை என்பவை சர்வதேச ஜனநாயக விழுமியங்களுக்கு அமைவாக, மக்களின் வாக்குகள் மூலம் தெரிவாகி இயங்க ஆரம்பித்துள்ளன. இவைகளைக் கண்டு சிங்கள அரசாங்கம் அச்சம் கொண்டுள்ளதை அவர்களின் பேச்சுகள், அறிக்கைகள் மூலம் அறிய முடிகின்றது.

சிறீலங்கா அரசாங்கம் புலம்பெயர் தமிழரின் அரசியல் நடவடிக்கைகளுக்கு பயங்கரவாத நாமம் சூட்ட முனைவதுடன், இவைகளை அழித்தொழிக்கப் போவதாகவும் பகிரங்கமாகச் சவால் விடுகின்றது.

இதற்காக, தம்முடன் சேர்ந்தியங்கும் இராணுவ துணைக் குழுக்களையும், தமிழர் மத்தியிலுள்ள சில சொறியல் அரசியல் அமைப்புகளையும் இணைத்து சூழ்ச்சித் திட்டங்களை வகுத்து வருகின்றது.

தமிழரின் இதயமாக விளங்கும் தாயக பூமி துரிதமாக சிங்கள-பௌத்த மயமாக்கப்படுவதை தெரிந்தும் தெரியாதது போல நடிக்கும் இந்த தமிழ்த் 'தலைவர்'களால், தமிழினத்தை எவ்வாறு காப்பாற்ற முடியுமோ தெரியாது!

புகலிடத் தமிழரில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிலர், சிங்கள அரசின் வஞ்சகத்துக்குத் துணைபோவதாக வரும் செய்திகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலுள்ளது.

ஒரு புறத்தில் தங்களின் புலனாய்வாளர்களை மேற்கு நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ள மகிந்த ராஜபக்ச நிர்வாகம், தமது வஞ்சகத்துக்குத் துணையாக வரும் தமிழரையும் இணைத்து, புகலிடத் தமிழரின் செயற்பணிகளை நசுக்கத் திட்டமிட்டுள்ளது.

எங்களைச் சுற்றியும் ஒரு முள்வேலியை அமைக்க சிறிலங்கா அரசு எடுக்கும் முயற்சியை ஆரம்பத்திலேயே சரித்து வீழ்த்த வேண்டிய பொறுப்பு எங்களுடையதாகியுள்ளது. 'நான்' என்பது விலகி, 'நாங்கள்' என்ற நிலைமையை நாம் உருவாக்குவோமானால், எங்களின் அரசியல் பயணத்தை இலகுவாக்கி இலக்கை அடைந்து விடலாம்!

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2010, ஜூன் 23, புதன் மதியத்தில் வந்த திடீர் விருந்தாளி!

கடந்த மாதம் 23ஆம் திகதி புதன்கிழமை, மதியம் 1:42 மணியளவில் திடீர் விருந்தாளியாக வீட்டுக்குள், அலுவலகத்துள், தொழிற்சாலைக்குள் அது வந்தபோது அனைவருமே 'ஆட்டம்' கண்டு விட்டனர். சுமார் முப்பது விநாடிகள் ஒவ்வொருவரையும் 'ஆட்டிவிட்டு' மறுகணமே அது காணாமற் போய்விட்டது.

ரொறன்ரோ உட்பட ஒன்ராறியோ, கியுபெக், அமெரிக்கா ஆகியவற்றின் பல நகரங்களில் ஏற்பட்ட சிறு நிலஅதிர்ச்சி, பாரிய சேதங்களை ஏற்படுத்தாவிட்டாலும், ஏதோவொரு வகையில் ஒருவகைப் பதிவை இங்கு ஏற்படுத்தியுள்ளது. முக்கியமாக ஜி-8, ஜி-20 மாநாடுகள் நடக்கவிருந்த வாரத்தில் இது ஏற்பட்டதால், பலரும் வெவ்வேறு சிந்தனைக்கு ஆளாக நேர்ந்தது.

கனடாவின் மிகப்பெரிய பயங்கரவாதத் தாக்குதலான ஏயர் இந்தியா விமான குண்டுத் தாக்குதல் 1985 ஜூன் 23ல் நடைபெற்றது. அதன் 25வது ஆண்டு நினைவு ரொறன்ரோவில் அனுஷ்டிக்கப்பட்ட வேளையில் இந்த நிலஅதிர்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் கலந்து உரையாற்றினார். நிலஅதிர்வினால் கூட்டத்தில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால், ஒட்டாவாவிலுள்ள பிரதமரின் அலுவலக சுவரில் மாட்டப்பட்டிருந்த படமொன்று அதிர்வினால் கீழே விழுந்துள்ளது.

கியுபெக்கில் ஒரு பாலம் சிறிது வெடிப்புற்றது. பல வர்த்தக நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பொருட்கள் கீழே சரிந்து வீழ்ந்தன. ஒட்டாவாவில் சில கட்டிடங்களின் கண்ணாடிகள் உடைந்து நொருங்கி வீழ்ந்தன. ரொறன்ரோவில் குறிப்பிடத்தக்க பாதிப்பு எதுவும் நிகழவில்லை. ஆனால், அதியுயர் மாடிக்கட்டிட அலுவலகப் பணியாளர்கள் மதியத்துடன் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

"நான் எனது கணினியின் முன்னாலிருந்து பணியாற்றிக் கொண்டிருந்தேன். திடீரென கணினியின் திரை (screen) குலுங்கி ஆடுவது போல இருந்தது. மேசையில் கிளாசிலிருந்த தண்ணீரும் தழும்பி ஆடியது. எனக்குத் தலை சுற்றுகின்றது போல எண்ணினேன். துணிகள் துவைக்கும் மெஷின் ஆடுவதுபோல ஒருவகைக் குலுக்கத்துடன் கட்டிடம் நடுங்கியது. எல்லாம் ஏறத்தாழ முப்பது செக்கன்டுகள் மட்டுமே! இது நிலஅதிர்ச்சி என்பதைப் பின்னரே உணரமுடிந்தது" என்று கூறுகிறார் 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர்.

5.0 பாதிப்பான இந்த நிலஅதிர்வை a modern earthquake என்று துறைசார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். மரங்கள், மின்கம்பங்கள் எதுவும் சரிந்து விழாதது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தாது தவிர்த்துவிட்டது.

## அடிக்கடி மாற்றம் பெறுகின்ற அகதிகள், குடிவரவு, பிரஜாவுரிமை சட்டம்! தாராள கொள்கை இறுகுகின்றதா?

கனடாவின் அகதிகள் மற்றும் குடிவரவு - பிரஜாவுரிமைகள் சட்டத்தில் பல மாற்றங்கள் திடீர் திடீரெனக் கொண்டுவரப்படுகின்றன. சில மாற்றங்கள் சட்டம் ஒழுங்கைப் பேணவும், அகதிகளையும் புதிய குடிவரவாளர்களையும் பாதுகாப்பதற்கும் உதவுகின்றன. ஆனால் பல மாற்றங்கள் கனடாவின் தாராள கொள்கையை இறுக்கமடையச் செய்கின்றன.

கனடாவில் சட்டவாளர்களாகப் (Lawyers) பட்டம் பெறாது, குடிவரவு ஆலோசகர்களாக (Consultants) தொழில் புரிபவர்கள் மக்களுக்குத் தவறான ஆலோசனை வழங்குவதையும், பெருந்தொகை பணத்தை அபகரிப்பதையும் தடுக்க சட்டம் கொண்டு வரப்படுகின்றது.

கனடாவிற்குள்ளும் வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் தம்மைக் குடிவரவு ஆலோசகர்களெனக் கூறிக்கொண்டு அப்பாவி மக்களை ஏமாற்றி வருவது தெரியவந்ததையடுத்தே கனடிய குடிவரவு அமைச்சு இந்த நடவடிக்கையை எடுக்க நேர்ந்தது.

அரசாங்க கட்டுப்பாட்டில் இதற்கென இயங்கும் கட்டுப்பாட்டு அமைப்பின் லைசன்ஸ் பெறாமல் குடிவரவு ஆலோசகர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு ஐம்பதாயிரம் டாலர் வரையான அபராதமும், இரண்டு வருடச் சிறைத்தண்டனையும் வழங்கக்கூடியதாக புதிய சட்டத் திருத்தம் அமையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகள் சட்டச் சீர்திருத்தம் என்ற பெயரில் கொண்டு வரப்பட்டுள்ள மாற்றமானது, சில நாடுகளைப் 'பாதுகாப்பான நாடுகள்' என்ற வகைக்குள் உட்புகுத்துகின்றது. பாதுகாப்பான நாடுகளிலிருந்து வரும் அகதிக் கோரிக்கையாளர்களின் மனுக்களுக்கு சாதகமான தீர்ப்பு கிடைப்பது அரிதாக்கப்படும்.

இவர்களது அகதிக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்போது, அதற்கான மேன்முறையீட்டிலும் பாதகமான முடிவுகளே கூடுதலாகக் கிடைக்குமென அகதிகளுக்கான கனடிய சட்டவாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். சகல நிராகரிப்பு மனுக்களும் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படுமென்று கூறப்படுவதாயினும், பாதுகாப்பான நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு உரிய பரிசீலனை கிடைக்காது போகலாமென்ற சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.


இதனை நிரூபிக்கும் வகையில், அகதி மனு நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு, "உங்கள் நாட்டில் இப்போது பிரச்சனை எதுவுமில்லை; பாதுகாப்பான நாடு" என்று அறிவிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

தவறான முறையில் கனடியப் பிரஜாவுரிமை (Canadian Citizenship) பெறுவதைத் தடுப்பதற்கான சட்ட மூலமும் தயாராகி வருகின்றது. முக்கியமாக, வெளிநாடுகளில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், பிரஜாவுரிமையைத் தடுக்கும் வகையில் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு அறிக்கை பெறுவது இறுக்கமாக்கப்படவுள்ளது.

ஏற்கனவே பிரஜாவுரிமை பெற்றவர்களும் ஏதாவது தவறான வழிகளில் அதனைப் பெற்றிருந்தால், அல்லது அவர்கள் கிறிமினல்களாக இருந்திருந்தால் வழங்கப்பட்ட பிரஜாவுரிமையை ரத்துச் செய்யவும், அவர்களை நாடு கடத்தவும் புதிய சட்டத்தில் இடமிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

சி-37 என்னும் புதிய பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ், தவறான வழியில் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கு ஒரு லட்சம் டாலர் அபராதமும், ஐந்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் கிடைக்கலாம்.

பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கு நேர் முன்னரான நான்கு ஆண்டுகளில் ஆகக்குறைந்தது 1095 நாட்கள் (மூன்று வருடங்கள்) கனடாவுக்குள் அவர் வசித்திருக்க வேண்டுமென்ற நிபந்தனையில் எந்த மாற்றமும் புதிய சட்டத்தில் இருக்காது. ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

வெறுப்பு ஏற்படுத்தும் குற்றச்செயல்கள் கனடாவில் அதிகரித்து வருவதை புள்ளிவிபரங்கள் சுட்டுகின்றன. 2008ஆம் ஆண்டில் 1,036 புகார்கள் இது தொடர்பாகச் செய்யப்பட்டதாக காவற்துறை தெரிவித்துள்ளது. இது, 2007ஆம் ஆண்டினைவிட 35 வீதத்தினால் அதிகமாகும். இதில் சுமார் 55 வீதமானவை இனத்துவ அடிப்படையிலும், 26 வீதம் மத அடிப்படையிலும், 16 வீதமானவை பாலியல் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட வெறுப்பேற்படுத்தும் குற்றச்செயல்களாகும்.

இந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் ஒன்ராறியோவிலுள்ள சுமார் 600 பாடசாலைகளில் முழுநாள் பாலர் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனால், முதலாம் தரத்துக்குப் பிள்ளைகளைத் தயார்படுத்துவது இலகுவாகுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 2011 செப்டம்பர் மாதத்தில் மேலும் 200க்கும் அதிகமான பாடசாலைகளில் முழுநாள் பாலர் வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். 2015-16ஆம் ஆண்டுக் காலத்தில் ஒன்ராறியோவின் ஆரம்ப நிலைப் பாடசாலைகள் அனைத்தும் இவ்வகுப்புகளைக் கொண்டிருக்கும்.

ரொறன்ரோவில் மூட்டைப் பூச்சித் தொல்லை அதிகரித்து வருகின்றது. இங்குள்ள வைத்தியசாலைகளில் நோயாளிகள்கூட மூட்டைப் பூச்சியால் அவஸ்தைப்படுவதாக ஒன்ராறியோ மாகாண சபையின் லிபரல் கட்சி உறுப்பினர் ஒருவர் குயின்ஸ்பார்க் அவையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். இங்குள்ள உயர்மாடிக் குடிமனைகள் மற்றும் தொடர் மாடிகளிலும் மூட்டைப் பூச்சித் தொல்லை அதிகரித்து வருவதாக ரொறன்ரோ நகரசபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டுத் தேர்தலின்போது ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் வழங்கிய குறைந்த வருமான மக்களுக்கான இலவச பற்சிகிச்சைத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், வருடமொன்றுக்கு 45 மில்லியன் டாலர்கள் வீதம் மூன்றாண்டுக்கு மொத்தம் 135 டாலர் இதற்கென அரசினால் ஒதுக்கப்பட்டது. ஆனால் இப்போது, நிதி இல்லையென்று கூறும் டால்ரன் மக்கன்ரி அரசு, தனது தேர்தல் கால வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டுள்ளது.

ரொறன்ரோ போக்குவரத்துச் சேவையின் (ரி.ரி.சி) ரயில்கள் மற்றும் பஸ்களில் பயணம் செய்வதற்கு கடனட்டையைப் (Credit card) பாவிக்கும் திட்டமொன்று பற்றி அதன் தலைமை அதிகாரிகள் தற்போது ஆராய்ந்து வருகின்றனர். இப்போது இந்தப் பயணத்துக்கு டிக்கட், டோக்கன் அல்லது பணம் செலுத்துவது போன்று கடன் அட்டையின் மூலம் பயணத்தை மேறகொள்ள இது வாய்ப்பளிக்கும். இதற்கான இயந்திரங்களை 1.3 மில்லியன் டாலருக்குக் கொள்முதல் செய்யவும் ஏற்பாடாகியுள்ளது. அமெரிக்காவின் சில நகரங்களில் இந்த முறை நடைமுறையிலுள்ளது.

ஆஸ்திரேலியாவின் புதிய பிரதமராகக் கடந்த மாத இறுதியில் ஜூலியா ஹில்லார்ட் பதவியேற்றார். ஆஸ்திரேலியாவின் முதலாவது பெண் பிரதமர் இவரே. முன்னர் பிரதமராகவிருந்த கெவின் ரூட் அகதிகள் விவகாரம் உட்பட பல விடயங்களில் கடும் போக்காளராக இருந்ததால், தமது கட்சிக்குள்ளேயே அவர் செல்வாக்கை இழக்க நேர்ந்தது. இதனால் கட்சி புதிய பிரதமரைத் தெரிய நேர்ந்தது. அகதிகள் விடயத்தில் பல மாற்றங்கள் வரவுள்ளதாக இவர் பதவியேற்றதும் வானொலிப் பேட்டியில் அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## Google-ல் தெரிவது Holography தொழில்நுட்பம்

Holography தொழில் நுட்பத்தை கண்டுபிடித்தவரும், முப்பரிமாணக்காட்சி புகைப்படங்களை முதன்முதலில் உருவாக்கியவருமான ஹங்கேரிய மின் பொறியியலாளர் டென்னிஸ் கெபொர் (Dennis Gabor) இன் 110 வது பிறந்த தினத்தை நினைவு கூர்ந்து கூகிள் இணையதளம் இன்று தனது இலட்சினையை வடிவமைத்துள்ளது.

இக்கண்டுபிடிப்பிற்காக 1971 ம் ஆண்டு பௌதீகவியலுக்கான நோபல் பரிசும் இவருக்கு கிடைத்தது. ஹோலோகிராபி (Holography) என்பது ஒரு பொருளில் இருந்து வெளிப்படும் ஒளிக்கதிர்களை, அதன் வெவ்வேறு தோற்றவகைகளில் பதிவு செய்து, அப்பொருளின் அசைவுகளை முப்பரிமாணத் தோற்றத்தில் (3-D Picturs) காட்டும் தொழில்நுட்பம்!

எனினும், இது முப்பரிமாண கற்பனை உருவங்களை உருவாக்கும், கிரபிக்ஸ் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்டதல்ல. Holography யின் சிறந்த தொழில்நுட்பம் பயன்படுத்திய ஆங்கில திரைப்படங்களாக Matrix, Avatar ஆகியயவற்றை கூறலாம். இதை விட சில தகவல் சேகரிப்புக்களுக்கும், அதி சிறந்த பாதுகாப்பு முறைமைக்கும், ஓவியக்கலை மெருகூட்டல் சம்பந்தமான விடயங்களுக்கும் இந்த Holography தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

## ஒன்ராறியோவில் ஒருங்கிணைந்த வரி அமுலுக்கு வந்துள்ளது

பல பொருட்களுக்கு 15 வீத வரி அறவிடப்படும் HST எனப்படும் ஒருங்கணைந்த வரித் திட்டம் இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. இதுவரை 5 வீதம் மட்டுமே வரியாகச் செலுத்திய பல பொருட்களுக் கும், சேவைகளுக்கும் இந்த மாதத்திலிருந்து 13 வீத வரி செலுத்த நேர்ந்துள்ளது.

புதிய வரி அறவிடப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய சிறு கையேடு ஒன்றினை ஒன்ராறியோவின் சகல குடியிருப்பாளர்களுக்கும் மாகாண அரசு தபாலில் அனுப்பி வைத்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reconciliation devoid of conciliation

Since the year 1956 until the advent of Tamil militancy, the Tamil people had been surviving between race riots and as hostages of periodic violence sponsored by the Sri Lankan State. Those who were lucky were able to flee to find refuge in their homelands in the north and the east but the more unfortunate living in the south had to face the wrath of rabid anti Tamil racism with many being massacred and their property destroyed. Thousands of victims went abroad abandoning their homeland and their way of life making up the critical mass of the Tamil Diasporas now scattered the world over. The atrocities upon them had a profound, lasting and often a ripple effect on their lives breaking up their family structures and their ethereal foundations. Very soon will come a time when a Tamil child in Denmark will not be able to communicate with their first cousin in England for Danish would be the only language that they could speak.

The term reconciliation used in calling the new commission namely the Lessons Learnt and Reconciliation Commission designed to deflect the allegations of war crimes and genocide by sections of the international community is a misnomer just as much as its motives are fraudulent. However, the commission affords an opportunity to apologists of Sri Lankan war crimes and the racist war, like Akashi from Japan and others who frequently enjoy the lavish hospitality of the Sri Lankan government to hang on to it in defence of its war crimes and human rights abuses. Indeed, Akashi would be familiar with the manner that the Japanese treated their prisoners of war during the Second World War but certainly not the abhorrent massacres of non combatant civilians who were citizens of his own country if there were any or for that matter in any other country. We are glad that the term Truth is not part of what the commission would be called as originally intended for the Sri Lankan State is incapable of the truth.

After Sri Lanka gained independence in 1948 no conciliatory measures were taken by the Sinhala leadership to treat the Tamils as an integral part of a Sri Lankan nation. Guided by xenophobic fears, considerations of racism, and unfounded mistrust, the Sinhala body politic through its majoritarian politics offering the semblance of democracy went on to alienate the Tamil people not only through discrimination but also by the use of periodic violence against them emanating even from parliamentary debate inciting violence against them. Every effort of conciliation between responsible Sinhalese and Tamil leaderships was thwarted by violence engineered by the Sinhala polity unleashed on the Tamil people forcing them to abandon any hope of conciliation thus rendering the need in the minds of the Tamils by the 1970s that they should revert to being a separate nation distinguished by their culture, status quo ante 1833.

What is now happening in the north and the east in reality are a far cry from any reconciliation! The atrocities, the political, economic and cultural oppression of the Tamil people by the military not permitting the Tamils to resettle in their homes on the pretext of the lack of water facilities and electricity and the need to de- mine their own homes are not without the blessings of the Rajapakse establishment. The deliberate naming of streets and villages only in the Sinhalese language is not without Rajapakse's knowledge. The increasing militarization of the north and the east ruled over as a police State by the military amounts only to adding insult to an already devastated and traumatized people claimed to have been "liberated", trying to retrace their bearings and heal their own wounds. This does not in any way help in the reconciliation process. Instances of rape by the military, abductions and disappearances keep mounting. Almost 10,000 suspected militants taken away from the IDP camps are said to have been summarily executed with no trace remaining. We are often told of youth being rehabilitated while they are in fact persons who have had nothing to do with the LTTE militancy arrested willy-nilly and released.

These are a recipe for the crystallisation of greater hatred for the Government and the Sinhala polity making the conviction for a separate Tamil State and self determination more resolute. The Tamil nation are a secular society as opposed to an ethno religious entity embracing all religions but for some strange reason no Tamil is a Buddhist unless one had had aspirations of being the prime minister. To create newly illuminated and glaring Buddhist temples and statues of Lord Buddha like those of Venus de Milo the Aphrodite of the Greek Milos to make a point of triumphalism in the midst of destruction and desolation of the homeless Tamil people and their meager habitation amounts not only to humiliating them but also prostituting the greatest philosopher the noble Lord Buddha and his teachings to make a point of Sinhala Buddhist chauvinism. Lord Buddha was neither a Sinhalese nor a Sri Lankan. It is by an accident of history that Sri Lanka became predominantly Buddhist because the Mauryan king Asoka of India became a Buddhist with the view to expiating his sins of the killing of soldiers on both sides in a war and sending his emissaries to the Sri Lankan king who was a Tamil to spread the message of the Buddha. It is not anything like Sri Lanka becoming predominantly Sikh in the present context!

It is said that that the Reconciliation commission is to inquire into the causes that led to terrorism, the lessons to be learnt from this, and the path to reconciliation. Even an eighth grade civics student will tell you that that the main cause that led to "Tamil terrorism" was reaction to the terrorism periodically and systematically unleashed on the Tamil people by the Sri Lankan State, the inequalities, the disregard for their traditional homelands and discrimination. If one refuses to learn from this then you are not anywhere near the path of reconciliation but only earning their mistrust if that is of any concern. No mention anywhere is made of the role of the Sri Lankan State and the Sinhala

(Contd on page 31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# பற்கூச்சம் ஏன்
## நீங்கள் செய்யக்கூடியது என்ன?

குளிராக எதுவும் சாப்பிட முடிவதில்லை என்று சொல்பவரா நீங்கள்? அல்லது காரம் புளிப்புச் சாப்பிட்டால் பல் கூசுகிறது என்கிறீர்களா? ஆம் நீங்கள் சொல்வது சரிதான் உங்களுக்குப் பற்கூச்சம் இருக்கிறது.

பற்கூச்சம் என்பது பாரதூரமற்றதாக அலட்சியம் பண்ணும்படி இருக்கலாம் அல்லது தாங்க முடியாத வேதனையாகவும் இருக்கலாம். சில நிமிடங்கள் முதல் பல மணிநேரம் நீடிப்பதாகவும் இருக்கலாம்.

பிரிட்சில் இருந்து எடுத்தது போன்ற குளிரான உணவுகளை (ஐஸ்கிறீம்) உண்ணும் போது அல்லது, குளிரவைத்த மென்பானங்களை அருந்தும்போது பற்கள் கூசும்.

அதேபோல புளிப்பு அதிகம் உள்ள பழங்கள், புளிப்பான உணவுப் பண்டங்களை உண்ணும்போதும் கூசும். சிலருக்கு கடுமையான இனிப்பும் கூசவைக்கும்.

பொதுவாக எமது பற்களின் மேற்புறம் எனாமல் எனப்படுவது கடினமானது. எமது உடலின் மிகக் கடுமையான பகுதி இதுதான். உணர்வற்றது அதனால் வலி தெரிவதில்லை.

ஆனால் எனாமலுக்கு உள்ளே மென்மையான நரம்புச் செறிவுள்ள டென்ரீன் இருக்கிறது. வெளியே உள்ள எனாமலுக்கு சேதம் ஏற்பட்டு உள்ளே உள்ள டென்ரீன் வெளிப்பட்டால் அது வலியை உணரும்.

பற்களும் முரசும் சந்திக்கும் பகுதியில் எனாமலின் தடிப்பு மிகக் குறைவாகவே இருக்கும். அதனால் சிறிய சேதம் அதில் ஏற்பட்டாலும் பற்கூச்சம் ஏற்படும்.

காரணங்கள்

மிக முக்கிய காரணம் நீங்கள் உபயோகிக்கும் பிரஸ்சும் அதனை நீங்கள் உபயோகிக்கும் முறையும்தான்.

பிரஸ்சைப் பொறுத்தவரையில் மென்மையான அல்லது நடுத்தரமுள்ள பிரஸ்சை (Soft or Medium) மட்டுமே உபயோகியுங்கள்.

மருத்துவர் ஆலோசனை கூறினால் மட்டுமே தடிப்பமான (Hard) பிரஸ் தேவை.

பல் துலக்கும் முறை

பல் துலக்கும் முறையும் முக்கியமானதாகும்.
அடுப்புக் கரி மண்டிய சமையல் பாத்திரத்தை அழுத்தித் தேய்த்துக் கழுவுவதுபோல பிரஸ்சால் கண்டபடி பற்களை உரச வேண்டாம். பற்களை மட்டுமில்லாது முரசுகளையும் புண்படுத்திவிடும்.

மேல்வாய்ப் பற்களை மேலிருந்து கீழ் நோக்கித் துலக்குங்கள். அதே போல கீழ்வாய்ப் பற்களை கீழிருந்து மேல் நோக்கித் துலக்குங்கள். இவ்வாறு துலக்கும்போது முரசு காயப்பட்டு தேயாது.

பல் அரிப்பு Dental Erosion என்பது பற்கூச்சத்திற்கான மற்றொரு காரணமாகும்.

இது பல்லின் மேற்பரப்பான எனாமலில் ஏற்படும் நுண் அரிப்புகளாகும். அமிலத் தன்மையான உணவுகளாலும் பானங்களாலும் அவ்வாறு ஏற்படும். எனாமல் கரைந்தால் உள்ளே இருக்கும் டென்ரீன் வெளித் தெரியவரும்.

முரசு கரைதல் மற்றொரு காரணமாகும். முரசின் கன அளவு குறைந்து கொண்டு போகும். வயதாகும் போது இது தானாக நடக்கும் செயலாகும். முரசு கரைந்து செல்லும்போது பற்களின் வேர் வெளித் தெரிய ஆரம்பிக்கும். பல் வேரை எனாமல் மூடியிருப்பதில்லை. அதனால்தான் முரசு கரைந்து அவை வெளியே வந்ததும் பற் கூச்சம் ஏற்படுகிறது.

முரசு நோய்கள் மற்றொரு காரணமாகும் வாயை ஒழுங்காகச் சுத்தம் செய்யாது விட்டால் பற்களின் மேல் அழுக்கு மென்படலமாகப் படிய ஆரம்பிக்கும். இது பிளாக் (Dental Plaque) எனப்படும். இதைக் கவனியாது விட்டால் அது இறுகி காரையாகப் (Tartar) படியும். இவ்வாறான காரை படர்தல் முரசு கரைதல் தீவிரமாகும். முரசு நோய்களுக்கு நீரிழிவு நோயும் முக்கிய காரணியாகும்.

பல்லுக் கடித்தல் பழக்கம் காரணமாக பற்களின் எனாமல் படிப்படியாகக் கரைந்து பற் கூச்சத்தை ஏற்படுத்தும். பற்சொத்தை பல் உடைதல் ஆகியவற்றால் ஆரம்பத்தில் பற் கூச்சம் ஏற்பட்டாலும், அதன் பின் பெரும்பாலும் பல்வலிதான் ஏற்படும். நித்திரையில் பல் கடித்தல் கடுமையாக இருந்தால் உங்கள் பற்களைப் பாதுகாக்க Tooth guard உதவும்.

பற்களை வெண்மையாக்குவதற்கு உபயோகிக்கும் பற்பசைகள் பெரும்பாலும் பேக்கிங் பவுடர் மற்றும் பெரோட்சைட் போன்றவற்றைக் கொண்டிருக்கும். அவற்றை அதிகம் உபயோகித்தாலும் எனாமல் கரைந்து பற்கூச்சம் ஏற்படும்.

சில தருணங்களில் நீங்கள் பல் மருத்துவரிடம் சென்று வந்தாலும் பற்கூச்சம் ஏற்படுவதுண்டு, பல் சுத்தப்படுத்துதல் மற்றும் பல பற்சிகிச்சைகளின் பின் ஏற்படக் கூடிய பற்கூச்சம் தற்காலிகமானது. ஒரு சில வாரங்கள் செல்ல தானே குணமாகிவிடும்.

வாயைச் சுத்தமாக வைத்திருக்க உபயோகிக்கப்படும் சில மருந்துகளில் (Mouth Wash) அமிலத்தன்மை இருக்கிறது. ஏற்கனவே டென்ரின் சேதமுற்ற ஒருவர் தொடரந்து அத்தகைய வாய் கொப்பளிக்கும் மருந்துகளை நீண்ட காலம் உபயோகித்தால் சேதம் மோசமாகி பற்கூச்சத்தை கொண்டுவரும்.

ஆனால் புளோரின் கலந்த வாய் கொப்பளிக்கும் மருந்துகள் பற்கூச்சத்தை குறைக்கும். எனவே பல் மருத்துவரின் ஆலோசனையுடனேயே அவற்றை உபயோகிப்பது உசிதமானது.

பற்கூச்சம் ஏற்பட்டால் என்ன செய்யலாம்.

வாய்ச் சுத்தத்தை ஒழுங்காகப் பேணுங்கள். காலை மாலை பல்துலக்குவதுடன், உணவுகள் நீராகாரங்களின் பின் வாயை அலசிக் கொப்பளிப்பது அவசியம். கடும் இனிப்பான மற்றும் புளிப்பு அமிலத் தன்மையுள்ள உணவு நீராகாரங்களின் பின் மிக முக்கியமாகும்.

மென்மையான பற்தூரிகையை உபயோகியுங்கள். முற்புறம் வளைந்த தூரிகைகள் பல்வரிசைகள் முழுவதையும் இலகுவாக அடைந்து சீர்மையாகத் துலக்க உதவும். தூரிகையால் கடுமையாக அழுத்தித் தேய்ப்பது கூடாது.

மென்மையாகவும், கவனமாகவும் சரியான முறையிலும் பல் துலக்க வேண்டும். முக்கியமாக முரசும் பல்லும் இணையும் இடங்களில் மிக அவதானமாகத் துலக்கவும்.

பற்கூச்சத்தைக் குறைப்பதற்கான விசேட பற்பசைகள் பரவலாகக் கிடைக்கின்றன. புளோரின் கலந்த பற்பசைகள் நல்லது. படுக்கப் போகும்போது அத்தகைய பசையில் சிறிது கூசும் பல்லின் மேல் தடவுவது உதவலாம். பற்களை வெண்மையாக்குவதற்கு உபயோகிக்கும் விசேட பற்பசைகள் பற்கூச்சத்திற்குக் கூடாது.

அமிலத்தன்மை, இனிப்பு, புளிப்பு அதிகம் உள்ள உணவுகளைத் தவிருங்கள். கடும் சூடு, கடும் குளிருள்ளவையும் கூடாது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# கோடை விடுமுறை ஒரு வரப்பிரசாதம்
# Summer Holidays - A boon

வருடாந்த கோடை விடுமுறை ஆரம்பித்துவிட்டது. அதுவும் ஒரு சில நாட்கள் அல்ல; முழுதாக இரண்டு மாதங்கள் இந்தப் பிள்ளைகளை வீட்டில் வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறோம் என்று பெற்றோர் அங்கலாய்க்கத் தொடங்கி விட்டனர். பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நான்கு மாதங்கள் கோடை விடுமுறை. பல வீடுகளில் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்குமிடையில் வாக்குவாதங்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன.

பல வளர்ந்த பிள்ளைகள் ஏற்கனவே சாமக் கோழிகளாக மாறிவிட்டனர். இரவிரவாக நண்பர்களுடன் கூடித் திரிவதும், சாமம் 3,4 மணிக்கு வீட்டுக்கு வருவதும், அவர்கள் வீடு திரும்பும் வரை பெற்றோர் ஏக்கத்துடன் அங்குங்குமாக வீட்டுக்குள் நடை பயின்று திரிவதும் பல வீடுகளில் ஆரம்பமாகி விட்டது. இரவில் தொலைத்த நித்திரையை பகலில் செய்து தங்கள் பொழுதைப் பிள்ளைகள் அவப்பொழுதாக்குகிறார்கள். இதில் கவலைக்குரிய விடயமாக இருப்பது, ஆண் பிள்ளைகள் மாத்திரமன்றிச் சில பெண் பிள்ளைகள்கூட இவ்வாறு செயற்படுவதுவே.

எல்லா வீடுகளிலும் இந்த நிலைமை காணப்படுவதாகக் கூற முடியாது. பல பிள்ளைகள் கோடை விடுமுறையில் தொழில் செய்து அடுத்த கல்வியாண்டுக்குத் தேவையான பணத்தைச் சேமிப்பதையும் காணலாம். சில பிள்ளைகள் மேலதிக பாடங்களை இவ்விடுமுறையில் செய்து முடித்து, அடுத்த ஆண்டுக்கான சுமையைக் குறைப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. பிள்ளைகளுக்கு இடையில் ஏன் இந்தப் பாரிய வேறுபாடு எனச் சிந்திக்க வேண்டியுள்ளது. பிள்ளைகள் தங்கள் பொழுதை பிரயோசனமாகக் கழிப்பதற்கும், சேமிப்புப் பழக்கத்தை சிறுவயதிலேயே கைக்கொள்ளவும் வித்திட வேண்டியவர்கள் பெற்றோர்களே. சிறு வயதிலேயே சரியான வழிநடத்தலைப் பெற்றோர் செய்வார்களானால், பிள்ளைகள் வளர வளர தாமாகவே நல்ல வழியில் செய்ய ஆரம்பித்து விடுவர்.

சிறு பிள்ளைகளிலிருந்து பல்கலைக் கழகம் செல்லும் மாணவர் வரை எத்தனையோ விடயங்களை இந்த நீண்ட கோடை விடுமுறையில் சாதிக்கலாம். சிறு பிள்ளைகளுக்கு வாழ்நாள் முழுவதும் பயன்படக்கூடிய பல திறன்களை இவ்விடுமுறையில் ஆரம்பிக்கலாம். உதாரணமாக, வாசிப்புப் போன்ற பயன் தரும் கல்வித்திறன் வேறு ஒன்றுமில்லை என்று திட்டவட்டமாகக் கூறலாம். பாடசாலை நாட்களில் பிள்ளைகள் தமக்குப் பாடசாலை வீட்டு வேலைகளும், பரீட்சைக்கான ஆயத்தங்களும் இருப்பதாகச் சாட்டுச் சொல்லி வாசித்தலைத் தட்டிக் கழித்து விடுவார்கள். மொழி அறிவது எனப்படுவது, சகல பாடங்களுக்கும் தேவைப்படுகிறது. இங்கு, சித்திரம், உடற்கல்வி, நடனம் முதலிய பாடங்களுக்குக் கூட மொழியறிவு தேவைப்படுகின்றது (language across the curriculum). மாணவர் தாமே வாசித்துச் சொற்கள், இலக்கணம், எழுத்து நடை, சிந்தனைகள், விளக்கங்கள் (vocabulary, grammer, style, thoughts, explanations) முதலியவற்றை வாசிப்பதன் மூலம் விருத்தியடையச் செய்கிறார்கள். பின் இவற்றைத் தமது பாடங்களில் உபயோகிக்கும் போது அதன் பெறுமானமே உயர்கிறது.

பல பெற்றோர் விடுமுறை காலத்தில் பிள்ளைகளைப் பிரத்தியேக வகுப்புகளுக்கு அனுப்புகிறார்கள். மொழி அறிவை விருத்தி செய்வது மாணவரின் தனி முயற்சியிலேயே தங்கியுள்ளது. மொழித்திறன் என்பது ஒரு பிள்ளை தாமாகக் கிரகிக்க வேண்டிய ஒரு விடயம். இது ஒரு நாளிலோ, ஒரு மாதத்திலோ ஏற்படும் விடயமன்று. பல வருட கால உழைப்பினால்தான் இதனைச் சாதிக்க முடியும். பிள்ளை ஆங்கிலத்தில் குறைவான புள்ளியைப் பெற்றவுடன், பெற்றோர் அவரை எந்த ஆங்கில ஆசிரியரிடம் பிரத்தியேக வகுப்புக்கு அனுப்பலாம் என்றே சிந்திக்கிறார்கள். கோடை விடுமுறையில் பல பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன. மாணவர்களுக்கு எழுதும் முறையை இவ்வகுப்புகள் வழங்குமே ஒழிய, மொழி ஆற்றலை வளர்ப்பது மாணவரின் கைகளில்தான் இருக்கிறது. படிப்படியாக இதனை வளர்ப்பதற்கு வாசிப்பைப் போன்ற சாதனம் கிடையாது. கோடை விடுமுறையில் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகை புத்தகங்களை வாசிக்க வேண்டும் என ஒரு குறிக்கோளை பெற்றோர் ஏற்படுத்திக் கொடுத்தல் நல்லது. எவ்வளவு சிறு வயதில் இந்தப் பழக்கத்தை ஆரம்பிக்கிறோமோ அதற்கு உரிய பயன் உண்டு.

சில பிள்ளைகள் எவ்வளவு வாசித்தாலும் எழுத்தாற்றலில் குறைவாக இருக்கலாம். இதனையும் கோடை விடுமுறையில் போதிய நேர அவகாசம் இருப்பதால் விருத்தி செய்ய முடியும். இதற்கு விடயமறிந்தவர்களின்உதவி தேவைப்படுகிறது. நண்பர்கள்கூட ஒருவருக்கு ஒருவர் உதவி செய்ய முடியும். ஆங்கில அறிவுள்ள பெற்றோர் தாமே மேற்பார்வை செய்யலாம்.

இந்நாட்டில் விடுமுறை காலத்தில் மாணவர்கள் எத்தனையோ தொழில்களைச் செய்வதற்கு வாய்ப்புகளுண்டு. பாடசாலை வழிகாட்டல் கந்தோரில்கூட இது சம்பந்தமான எத்தனையோ அறிவித்தல்களைக் காணக்கூடியதாக வுள்ளது. இவைதவிர நண்பர்கள்கூட ஒருவருக்கொருவர் உதவ முடியும். வேலை கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, தொண்டர் சேவைகள் செய்யப் பல வாய்ப்புகள் விடுமுறை காலத்தில் காணப்படும். சில மாணவர்கள் வேறு நாடுகளுக்குச் சென்று தொண்டர் சேவையில் ஈடுபட்டு, புதிய அனுபவத்தைப் பெறுவதையும் காண்கிறோம். பிள்ளைகளிடத்திலும் பெற்றோர் மத்தியிலும் பணத்திற்காகத்தான் வேலை என்ற மனநிலை மாறவேண்டும். இங்கு நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம், தொழில் வாய்ப்புகள் மூலம் மாணவரின் எதிர்காலம் எவ்வாறு சிறப்பாக அமையும் என்பதாகும்.

எங்கள் சமூகப் பெற்றோர் விடுகின்ற பெரும் பிழை யாதெனில் பிள்ளைகளின் வேலை வாய்ப்புகளையெல்லாம் தாமே இழுத்துப் போட்டுக்கொண்டு செய்வதாகும். பிள்ளை படித்தால் போதும், அவர்களைக் குழப்பாமல் நாமே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுமென்ற அதீத அன்பான பெற்றோராக எம்மில் பலர் இருக்கிறோம். கனடியப் பெற்றோர் சிறு வயதிலேயே பிள்ளைகளுக்கு அவரவர் வேலையைச் செய்வதற்குப் பழக்குவதோடு நின்றுவிடாது, வீட்டிலுள்ள வேலைகளை அவரவர் வயதுக்கும் வல்லமைக்கும் ஏற்றதாக பிரித்துக் கொடுத்து விடுகிறார்கள்.

பிள்ளைகள் வளர்ந்த பின்னர், அவர்களே வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தும்போது அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். பிள்ளைகளின் வேலைகளை நாம் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தல், அவர்களுக்கான சந்தர்ப்பத்தைப் பறிப்பதாகும். இதனால் பிள்ளைகள் தம்மைத்தாமே பார்த்துக் கொள்ளும் திறன் அற்றவர்களாகி விடுகிறார்கள். கோடை விடுமுறை காலம் பிள்ளைகள் வீட்டு வேலைகளைப் பழக ஒரு வாய்ப்பான காலம். இதனால் பிள்ளைகள் மாத்திரம் பயன் அடைவதில்லை. பெற்றோரும் ஆறுதல் அடைய முடிகிறது.

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UN chief appoints Sri Lanka war crimes panel

UN chief Ban Ki-moon Tuesday set up a panel to investigate allegations of war crimes in Sri Lanka during the government's war against the Liberation Tigers, a UN spokesman said. The three-strong panel would be chaired by Marzuki Darusman from Indonesia, the UN's special envoy for North Korea, and hoped to complete its work in four months, AFP reported. The other two members of the panel are human rights expert Yasmin Sooka from South Africa and Steven Ratner, an expert in international law of war from the United States. Mr. Ban launched the investigation "to advise him on the issue of accountability with regards to any alleged violations of international human rights and humanitarian law during the final stages of the conflict in Sri Lanka."


Mr. Marzuki Darusman


Ms. Yasmin Sooka


Prof. Steven Ratner

Mr. Ban's spokesman, Martin Nesirky, emphasized the group had a primarily consultative role, and that "primary responsibility for investigating rests with the authorities of Sri Lanka."

"It will look into the modalities, applicable international standards and comparative experience with regard to accountability processes, taking into account the nature and scope of any alleged violations in Sri Lanka," he said.

But Peggy Hicks, global advocacy director with Human Rights Watch, warned it has "long been abundantly clear that the Sri Lankan government is unwilling to seriously investigate wartime abuses."

"Secretary-General Ban's new panel will only be of value if it can quickly produce a roadmap for an independent investigation that the secretary-general implements," she told AFP.

Mr. Marzuki Darusman was the Attorney General of the Republic of Indonesia for the period 1999 to 2001. He is a member of the National Commission of Human Rights in Indonesia (Komnas HAM). Mr. Darusman served as Chairman of the Joint Fact Finding Commission established in Indonesia with regard to the riots of May 1998. UN Secretar General appointed Mr Darusman to the Commission of Inquiry into the facts and circumstances of the assassination of former Pakistani Prime Minister Mohtarma Benazir Bhutto in July 2009.

Mr. Darusman graduated in 1974 from the International Maritime Law Faculty, University of Parahyangan.

Ms. Sooka joined the Foundation for Human Rights in 2001 and serves as its Executive Director. She practised as a human rights lawyer during the apartheid era. In 1995, she was appointed as a Commissioner on the Truth and Reconciliation Commission and was responsible for the final report.

(Contd. page on 33)

## கோடை விடுமுறை...

கோடை விடுமுறையில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய விடயம், பாதுகாப்பு. Safe kids Canada வின் அறிக்கையின்படி ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் கனடாவில் சராசரியாக ஐம்பது குழந்தைகள் விபத்தினால் இறப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1500 குழந்தைகள் பாரதூரமான விபத்துகளில் அகப்படுவதாகவும் அறிவித்துள்ளனர். இவைகள் தவிர்க்கப்படக் கூடியவை.

நீச்சல் தடாகத்தினுள்ளோ, அன்றேல் குடும்பமாக உல்லாசப் பயணம் செய்யும்போதோ நீரில் மூழ்கிக் குழந்தைகள் இறப்பதும், சைக்கிளில் செல்லும் போது வாகனங்களால் மோதப்பட்டு இறப்பதும், தொடர்மாடிக் கட்டிடங்களின் பல்கனியிலிருந்து தவறி விழுவதும் கோடையில் அதிகமாக இடம்பெறும் நிகழ்வுகள். இந்த இழப்புகள் ஆற்றொணாத் துயரை ஏற்படுத்துகின்றன. பெரியவர்களின் மேற்பார்வை போதியளவு இருந்திருந்தால் இவை தவிர்க்கப்படலாம். ஆகவே, கோடை விடுமுறையில் சிறுபிள்ளைகளை பெற்றோர் பாதுகாப்பாக வளர்ப்பது அவசியம்.

வளர்ந்த பிள்ளைகளும் கோடை விடுமுறையில் வாகன விபத்துகளில் அகப்படுதல் சகஜம். அதனைவிட, ஒன்றுகூடல்களில் வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்படுவதும், உண்டு. பெற்றோர் தமது பிள்ளைகள் எங்கு செல்கிறார்கள், எந்த நேரத்துக்கு வீடு திரும்புகிறார்கள் என்பவற்றில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவது அவசியம். இன்று பல பிள்ளைகளிடம் செல்லிடத் (ஸாலல) தொலைபேசி உள்ளதால் அவர்களைப் பெற்றோருடன் தொடர்பு கொள்ளுமாறு கண்டிப்புடன் சொல்லி வைக்க வேண்டும்.

வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் விடுமுறை காலத்தில் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயம் தமது வீடு பாதுகாப்பாக இருக்கிறதா என்று உறுதிப்படுத்த வேண்டும். முக்கிய தொலைபேசி எண்களைப் பிள்ளைகளிடம் கொடுத்து வைக்க வேண்டும். கோடை விடுமுறை என்பது பிரயோசனமாகக் கழிக்கப்பட வேண்டிய ஒரு காலம். இன்று எங்கள் பிள்ளைகளில் பலர் பெற்றோர் ஸ்தானத்தை அடைந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டாம் தலைமுறையினருக்கு இந்நாட்டு விழுமியங்கள் பற்றி போதிய விளக்கம் உண்டு. ஆகவே, அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விடுமுறை ஏற்படும் காலத்தில் தாமும் தமது வருடாந்த விடுமுறையை எடுத்துப் பலவிதமான பொழுதுபோக்குகளில் ஈடுபடலாம். ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# வணங்குதவற்கு ஒரு மண்

புறநானூறில் ஒரு பாடல் உள்ளது. குறுங்கோழியூர் கிழார் சேரமானைப் பார்த்து பாடியது. 'உன்னுடைய மண்ணை கர்ப்பிணிப் பெண்கள் மட்டுமே உண்ணுவர். எதிரிகள் உண்ண முடியாது.' பழந்தமிழர் சொந்த மண்ணை மாற்றான் அபகரிக்காமல் பாதுகாப்பதற்காகப் போர் புரிந்தார்கள். அதுவே ஒரு வாழ்வுமுறையாக அமைந்தது. மண்ணுக்காக போர்புரிந்து மரித்த வீரர்களுக்கு நடுகல் எழுப்பி அவர்களை வழிபடுவது தமிழர் பண்பாடாகியது.

அமெரிக்காவின் தலைநகரமான வாசிங்டனுக்கு சமீபத்தில் போயிருந்தேன். ஆப்பிரஹாம் லிங்கன் ஜனாதிபதியாக இருந்தபோது ஆர்லிங்டனில் போரில் இறந்த வீரர்களுக்காக ஒரு பிரம்மாண்ட மான மயானத்தை அமைத்தார். அதிலே உள்நாட்டுப் போரில் தொடங்கி இன்று ஆப்கானிஸ்தான், ஈராக்கு போன்ற நாடுகள்வரை மரிக்கும் அமெரிக்க வீரர்களை அடக்கம் செய்கிறார்கள். இன்றைக்கு அங்கே 300,000 நடுகல்கள் உள்ளன. வருடா வருடம் மயானத்தில் பெரும் அணிவகுப்பும் மரியாதையும் நடக்கிறது. இருபத்திநாலு மணிநேரமும் வீரர்கள் காவல் காக்கிறார்கள். தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் அணிவகுப்பை பார்வையிடுவதற்காக வருகிறார்கள்.

இம்முறை நினைவுநாள் அன்று ஒபாமா அஞ்சலி செலுத்தியபோது ஒரு தகவல் சொன்னார். அமெரிக்காவில் 1865ல் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. வடக்கு வென்றது, தெற்கு தோற்றது. போர் முடிந்து ஒருவருடம் கழித்து சில பெண்கள் கொலம்பஸ் என்ற இடத்தில் போரில் மரித்த வீரர்களின் சமாதிகளில் பூக்கள் வைத்து மரியாதை செய்தார்கள். அருகே இறந்துபோன வடக்கு வீரர்களின் கல்லறைகள் பூக்கள் இல்லாமல் வெறுமையாகக் கிடந்தன. அதற்கும் மலர்கள் வைத்து வணங்கினார்கள். அவர்களும் அமெரிக்க வீரர்கள்தானே. அன்றிலிருந்துதான் நினைவுநாள் உண்டானது. இறப்பிலே வென்றவர் தோற்றவர் என்ற பேதம் இல்லை எல்லோருமே சமம்.

கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல நாடுகளில் போரில் இறந்துபோன வீரர்களின் சமாதிகளில் வருடாவருடம் மரியாதை நடக்கிறது. ஐரோப்பாவில் பல நாடுகள் வருடத்தில் ஒருநாளை மரித்தவர்களுக்காக ஒதுக்கிவைத்து அந்த நாளில் மயானங்களுக்கு சென்று இறந்தவர்களின் கல்லறைகளை சுத்தம் செய்து பூச்செண்டு வைத்து வழிபடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றன. மாமன்னன் நெப்போலியன் இறந்து பல வருடங்களுக்கு பின்னர் அவன் உடல் பிரான்சுக்கு கொண்டு வரப்பட்டது. அவன் ஞாபகமாக ஒரு ஸ்தூபி எழுப்பட்டு அதற்கு மக்கள் மரியாதை செய்கிறார்கள். ஆப்பிரிக்காவிலே இறந்துபோனவர்கள் எல்லாம் தெய்வம்தான். மூதாதை வழிபாடு அவர்களுக்கு முக்கியமானது. இறந்த போர்வீரர்களுக்கான மரியாதை இன்னும் முக்கியம் பெறுகிறது.

1919ம் ஆண்டு நடந்த ஜாலியன்வாலா படுகொலை எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். மைக்கேல் டையர் என்பவர்தான் அப்போது பஞ்சாப் கவர்னராக இருந்தவன். அந்தப் படுகொலையில் 400 நிரபராதிகள் சுட்டு கொல்லப்பட்டனர். மைகேல் டையர் அந்தக் கொலைகளுக்கு ஆணை கொடுத்தது மட்டுமல்லாமல் அவன் அவற்றை சரி என்று நியாயப்படுத்தியவன். கொலை நடந்த இடத்தில் சனங்களுக்கு தண்ணீர் பரிமாறியவன் உத்தம் சிங். துடிதுடித்து விழ்ந்து மடிந்த சனங்களை கண்களால் பார்த்தவன். அவன் அந்த இடத்து மண்ணை அள்ளி சட்டைப்பையில் வைத்துக்கொண்டு டையரை பழி வாங்குவதற்காக இங்கிலாந்துக்கு புறப்பட்டான். அங்கே 21 வருடங்களாக அவனைத் தேடி கடைசியில் காக்ஸ்டன் மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றபோது அங்கே பேசவந்த டையரை சுட்டு வீழ்த்தினான். காந்தி அவன் செய்த கொலையை கண்டித்தார். உத்தம் சிங்கை 1940ம் வருடம் இங்கிலாந்தில் தூக்கில் போட்டார்கள்.

இந்தியா விடுதலை பெற்ற பின்னர் 1974ல் அவனுடைய எச்சங்களை கொண்டுவந்து இந்திய அரசின் ஆதரவோடு எரித்து கங்கையில் கரைத்தார்கள். அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அந்த நிகழ்ச்சியில் கலந்து மரியாதை செய்தார். இன்றும் உத்தம் சிங்கின் நினைவுச் சின்னத்தை பஞ்சாபில் மக்கள் வழிபடுகிறார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரேயே இலங்கையில் அநுராதபுரத்தில் தமிழ் மன்னன் எல்லாளனின் நீதியான அரசாட்சி நடந்தது. அவனுடைய ராச்சியத்தை கைப்பற்ற சிங்கள அரசனான துட்டகைமுனு போர் தொடுத்தான். அந்தப் போர் முன்னெப்பொழுதும் கண்டிராதமாதிரி உக்கிரமானதாகவும் கொடூரமானதாகவும் இருந்தது. அந்தச் சமரை மஹாவம்சம் 'குளத்திலிருந்த நீர் எல்லாம் ரத்தச் சிவப்பாக மாறியது' என்று வர்ணிக்கிறது. போரில் துட்டகைமுனு வென்றான் எல்லாளன் இறந்துபோனான். எல்லாளன் மக்களால் போற்றப்பட்ட தமிழ் மன்னனாகையால் அவன் விழுந்த இடத்தில் துட்டகைமுனு அவன் நினைவாக மண்டபம் எழுப்பினான். அந்த இடத்தை தாண்டும்போது மரியாதை செய்யவேண்டும் என்றும் வாத்தியங்கள் மௌனிக்கப்படவேண்டும் என்று சட்டம் இயற்றினான். அந்தச் சட்டம் பல நூறு ஆண்டுகள் மக்களால் மதிக்கப்பட்டது.

எந்த ஒரு போரிலும் உயிர் நீத்தவர்களுக்கு மரியாதை செய்வதுதான் உயர் பண்பாளர்களின் கடமை. ஆனால் இன்று ஈழத்து போரில் இறந்துபோன வீரர்களின் நடுகல்கள் அழிக்கப்படுகின்றன என்று வருகின்ற செய்தி நம்ப முடியாததாக இருக்கிறது.

புறநானூறில் மாங்குடி கிழார் இப்படி சொல்கிறார்.

மலர்களில் குரவம், தளவம், குருந்தம், முல்லை என்று நான்கு வகை உள்ளன.
உணவில் வரகு, தினை, கொள்ளு, அவரை என்று நான்கு வகை இருக்கின்றன.
குடிகளிலும் நான்கு வகை.
ஆனால் தொழுவதற்கு எங்களுக்கு தெய்வம் ஒன்றுதான்.
அது இறந்துபோன வீரனின் நடுகல்.

இன்றோ எமக்கு தெய்வமில்லை.
நடுகல் இல்லை.
ஒரு மண்ணும் இல்லை. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன்

# பாதையோர உதவி

இயந்திரம் பொருத்தப்படாத வாகனங்களுக்கும் பாதையோர உதவியை மே மாதத்திலிருந்து விஸ்தரித்துள்ளது கனடா மோட்டார் கழகம் - Canadian Automobile Association.(C.A.A).

இப் புதிய உதவித்திட்டத்தின் கீழ் பல சலுகைகளை C.A.A வழங்கிவருவதால் சுமார் 2 கோடி மகிழுந்து அங்கத்தவர்களில் ஈருருளிகளையும் பயன்படுத்தும் பலர் நன்மை அடையவுள்ளனர்.

தென் மத்திய ஒன்ராறியோவில் உள்ள ஊ.யு.யு அங்கத்தவர்களுக்கும் குடும்ப உறுப்பினர்களுக்கும் இலவசமான இச்சேவை தினமும் 24 மணிநேரமும் கிழமையின் 7 நாட்களுக்கும் கிடைக்கும்.

சங்கிலி இணைத்தல், காற்று நிரப்பல், தூம்பு (tube) ஒட்டுதல், துளை மூடல் (puncture closure), மிதிகட்டை (Pedal) மாற்றல் உட்பட பயணிக்க உகந்த சில சிறு திருத்த வேலைகளையும் பாதிப்படைந்தோர் பாதிப்படைந்த பாதையோரத்திலிருந்தே நிவர்த்திக்கப் பெறலாம்.

அடிப்படை அங்கத்தவர்கள் 10 கி.மீ தூரத்திற்கும், கூடுதல் அதிகாரமுள்ள அங்கத்தவர்கள் 200 கி.மீ தூரத்திற்கும் கட்டியிழுத்தல் சேவையையும் 4 தடவைகள் பெற்றுக் கொள்ள முடியும்.

புதிதாக இணைபவர்களுக்கு அறிமுக வெகுமதியாக 320 கி.மீ தூரம்வரை கட்டியிழுக்கப்படும்.

$72. 00 வருட அங்கத்துவப் பணமாக அடிப்படை உறுப்பினர்களும். கூ 113. 00 வருட அங்கத்துவப் பணமாக கூடுதல் அதிகாரமுள்ள அங்கத்தவர்களும் செலுத்த வேண்டும்.

விபத்தினால், கோளாறினால், பழுதினால் பாதையோரங்களில் அந்தரிக்கும் அங்கத்தவர்களுக்கு மேலதிககட்டணம் எதுவுமின்றியே 45 நிமிடங்களுக்குள் இதன்மூலம் நிவாரணம் கிடைத்துவிடும்.
அதிக உதவி தேவைப்படும் பகுதிகளில் ஈருருளிகளில் சுற்றித்திரியும் ஊ.யு.யு மீட்பு பிரிவினரும் ஈடுபடுத்தப்படவிருப்பது சூழல் மாசினைக் கட்டுப்படுத்துவதில் காத்திரமான பங்கு வகிக்கும்.

பந்தய மிதிவண்டி, மலை மதிவண்டி, மடக்கு மிதி வண்டி, பொதி மிதி வண்டி, முச்சக்கர வண்டி, மகளிர் மிதி வண்டி, சிறுவர் மிதி வண்டி, அதி நுட்பமிதி வண்டி, சக்கர நாற்காலி இருவர் ஓட்டக்கூடிய மிதிவண்டி (Tandem) போன்றனவற்றுக்கும் மீட்பு உதவி கிடைக்கும்.

தனது சிறுவர் மிதிவண்டியின் சங்கிலிப்பூட்டின் சாவி தொலைந்து விட்டது. C.A.A யின் வருகைக்காகக் காத்திருக்கின்றேன் என எதிர்காலத்தில் ஒரு சிறுவன் கூறலாம்.

அல்லது சங்கிலி இணைப்பி அறுந்துவிட்டது C.A.A யினர் பொருத்துவதற்காக விரைகின்றார்கள் என முச்சக்கர வண்டியிலிருந்தவாறே வலுவிழந்த ஒருவர் பலமாக சொல்வது காதில் விழலாம்.

வைத்தியசாலை நடைபாதை ஜனநெரிசலில் சிக்குண்ட தனது சக்கர நாற்காலிக்கு கோட்டம் எடுக்க (wheel bend removel) C.A.A தாமதிக்கின்றது என முதியவர் யாராவது அங்கலாய்க்கலாம்.

மலைமிதி வண்டி மூலம் இலகுவாகவே அடிவாரத்திற்கு வந்து விட்ட மலைவாசி மீண்டும் உச்சிக்கு செல்லப்பஞ்சிப்பட்டு C.A.A யினரை கட்டியிழுக்குமாறு கோரி, மலைக்க வைக்கலாம்!

காலில் பரவசத்துடன் மிதி வண்டியை மிதித்தவாறே பழுதடைந்த பிறிதொரு மிதிவண்டியை ஒரு கையால் லாகவமாகப்பற்றிப் பிடித்தபடி எட்டு ஊரும் எட்டும் ஊர்தான் என கரடுமுரடெங்கும் இழுத்துச்சென்ற அந்த நாட்கள் காலத்தால் வீழ்ந்து விடாது மனதினில் இன்னமும் அலைகின்றது. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜி-20 மாநாடுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டம் வன்செயலாக மாறியதால்...

**ரொறன்ரோவில் கடந்த மாதம் 26, 27ஆம் திகதிகளில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட அமைதியான கண்டன ஊர்வலம் திடீரென வன்செயலாக மாறியதால், ரொறன்ரோ நகரின் மத்திய பகுதி (டிஒனெ தஒனெ) யுத்தக் களமாக மாறியது. வங்கிக் கட்டடம், மருந்தகம், கோப்பிச் சாலை உட்பட பல வர்த்தக நிலையங்கள் கற்களாலும் பொல்லுகளாலும் அடித்து நொருக்கப்பட்டன. பல வீதிகள் திடீர் திடீரென மூடப்பட்டன.**

**புளோர் விதியிலிருந்து யுனியன் சப்வே பகுதியை நோக்கிய சகல பஸ், ரயில் சேவைகளும் ரத்தாகின. மூன்று பொலிஸ் வாகனங்கள் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன. இதனை பல தொலைக்காட்சி நிலையங்களும் நேரடியாக ஒளிபரப்பின.**

**குயின்ஸ் வீதியில் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்ய நேரிட்டது. பல சந்தர்ப்பங்களில் நிலைமை கட்டுக்கடங்காமல் போனாலும், மாநாடு நடைபெற்ற இடத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட தடைவேலியை எவரும் தாண்ட அனுமதிக்கப்படவில்லை. 27ஆம் திகதி காலை வரை சுமார் ஐநூறு பேர் கைதானதாக பொலிசார் அறிவித்தனர்.**

**குயின்ஸ் பார்க், அலன் பார்க் ஆகிய இடங்களை மையப்படுத்து 25ஆம் திகதியும் 26ஆம் திகதியும் ஆரம்பமான கண்டன ஆர்ப்பாட்டங்கள், கறுப்பு உடையணிந்து சிறு குழுவினரால் வன்செயலாக மாற்றப்பட்டதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**

**27ஆம் திகதி காலையில் நிலைமை கட்டுப்பாடாகியது போலத் தென்பட்டாலும், சிறிது சிறிதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தோன்ற ஆரம்பித்தனர். பொலிசார் மேலும் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். ஜி-20 மாநாட்டின் பாதுகாப்புக்காக சுமார் ஒரு பில்லியனுக்கும் அதிகமான டாலர்கள் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.**



பொன்னையா விவேகானந்தன்

# விரும்பியது செய்

5

**சுற்றிலும் மக்கள் கூட்டம். அரச பரிவாரங்கள். சிம்மாசனம் போன்ற இருக்கை ஒன்றில் அரசனான கிள்ளிவளவனும் அமர்ந்திருக்கின்றான்.**
**அது ஒரு திறந்த திடல்.**
**திடலின் நடுவே இரு சிறுவர்கள், தலை மட்டும் வெளியே தெரியும் நிலையில் நிலத்துள் புதைக்கப்பட்டிருக்கின்றனர். பயமறியாப் பருவமெனினும், நிகழ்வதறியாது மனமழிந்து அழுதுகொண்டிருந்தன கபடமறியாக் கண்கள்.**
**பதற்றத்தை எங்கும் படரவிட்டிருந்த கூட்டத்தின் நடுவே சுடுகாட்டு அமைதி. ஆணைக்காகக் காத்திருந்த காவலரை நோக்கித் தலையசைக்கின்றான் கிள்ளிவளவன். தூரத்திருந்து இரு யானைகள் சிறுவர்களை நோக்கி நகரத் தொடங்குகின்றன. கூடியிருந்த கூட்டத்தின் பதற்றம் உச்சந்தலை தொடுகின்றது. யானைகளைக் கண்ட சிறுவர், தம் அழுகை மறந்தனர். அந்த முகங்களில் மகிழ்ச்சி கூத்தாடத் தொடங்குகின்றது. தமது இளந்தலைகளை இடறவே இந்த யானைகள் புறப்பட்டு வருகின்றன என்பதை உணராது, யானைகள் நடந்து வரும் அழகில் வியந்து நின்றன சிறு விழிகள்.**
**யார் இந்தச் சிறுவர்கள்?**
**கடையெழு வள்ளல்களில் ஒருவனான மலையமான் திருமுடிக்காரியின் புதல்வர்கள். கொடையால் புகழ் கொண்ட மலையமானைப் பொறுக்காத கிள்ளிவளவன் போரில் அவனைக் கொன்றான். எனினும் தணிந்து போகவில்லை பொறாமைத் தீ. அவனது சிறு புதல்வர்களைச் சிறைப்பிடித்து வந்தான்.**
**அவர்களின் தலை எடுக்கும் நிகழ்வே இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. யானைகள் நெருங்குகின்றன. சிறுவர்கள் களிப்பில் சிரிக்கின்றனர். சுற்றியிருந்த மக்கள் சிலர் மதி மயங்கினர்.**
**பிஞ்சுத்தலைகள் பந்தாடப்படுவதற்கு இன்னும் சில அடிகள்.**
**நிறுத்து மன்னா!**
**பாகர் யானைகளை நிறுத்தினர்.**
**குரலின் திசை நோக்கி எரிச்சலுடன் திரும்பினான் கிள்ளிவளவன்.**
**மன்னா! என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய்? பதற்றமும் கோபமும் கலந்த குரலில் ஓங்கி ஒலித்தவாறு கோவூர்கிழார் எனும் பெரும் புலவர் மன்னனை நெருங்கினார்.**
**புலவர் பெருமானை அடையாளம் கண்ட மன்னன் உடன் எழுந்தான். வணங்கினான்.**
**கோவூர்கிழார் தொடர்ந்தார்.**
**'மன்னா, நீ உன்னை அறிவாயா? புறாவுக்காக தன் சதையை அறுத்துக் கொடுத்த சோழ மன்னர் மரபில் வந்தவனல்லவா நீ. இந்தச் சிறுவர்கள் யார் தெரியுமா? சொல்லேர் உழவர்களான புலவர்களின் வறுமையைப் போக்கக் கொடை கொடுத்து வாழ வைத்த மலையமான் புதல்வர். அந்தச் சிறுவர்களைப் பார். யானைகள் தம்மைக் கொல்ல வருவதை அறியாமல், அழுகை விடுத்துச் சிரிக்கின்ற அந்த முகங்களைப் பார்.**
**மன்னா! நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இனி நீ விரும்பியதைச் செய். நான் போய் வருகின்றேன்" கொட்டி முடித்து வெறுமையானர் கோவூர்கிழார்.**

**புலவர் காலில் விழுந்தான் கிள்ளிவளவன். கொலைக்களம் பூக்களமானது. சிறுவர் விடுவிக்கப்பட்டனர். மக்கள் மகிழ்ச்சிக் கூத்தாடினர்.**
**இளம் தலைகளைக் காத்த பெருமையில் மீண்டும் அரியாசனம் ஏறிக்கொண்டது தமிழ்.**

**நீயோ, புறவினல்ல, லன்றியும் பிறவும்**
**இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை**
**இவரே, புலனுழு துண்மார் புன்கண் அஞ்சித்**
**தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்**
**களிறுகண் டழுஉ மழா அன் மறந்த**
**புன்தலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி**
**விருந்திற் புன்கணோ வுடையார்**
**கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே. ● (புறம் 46)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## கோவை கண்ட மு.கவின் குடும்ப மாநாடு!

"உலகப் பந்தில் தமிழை உயர்த்தவா? அல்லது கோவை மண்டலத்தில் தி.மு.கவை வளர்க்கவா" எனச் செம்மொழி மாநாடு தொடங்கும் முன்னரே அரசியல் அரங்கில் விமர்சன அம்புகள் பாய்ந்தன. இப்போது மாநாட்டு அனைத்து நிகழ்ச்சிகளிலும் முதல்வர் கருணாநிதியின் உறவு முகங்களே தெரிய....'இது செம்மொழி மாநாடா...இல்லை, குடும்ப விழாவா?' என்ற முணுமுணுப்பை கோவையில் கேட்க முடிந்தது.

போதாக்குறைக்கு தி.மு.க தரப்பில் இருந்தே, "உலகத் தமிழ்ச் செம்மொழி மகாநாடு - சூரியக் குடும்பம் அழைக்கிறது" எனத் தலைப்பட்டு கருணாநிதியின் படம் நடுவில் இருக்க அதனைச் சுற்றி அழகிரி, ஸ்டாலின், துரை, தயாநிதி, தயாளு அம்மாள், கனிமொழி உள்ளிட்ட உறவுகளின் படங்கள் உள்ள 'பானர்'கள் வேறு!

### அடேங்கப்பா ஸ்டாலின் அசத்தல் கனிமொழி

செம்மொழி மாநாட்டில் பலருடைய பார்வையையும் தம் பக்கம் திருப்பிய இருவர் - ஒருவர் துணை முதல்வர் ஸ்டாலின், மற்றவர் கனிமொழி எம். பி.

நள்ளிரவு, அதிகாலை என்று எல்லா நேரங்களிலும் இருவரும் மாநாட்டு வளாகத்தில் வலம் வந்தபடியே இருந்தனர். அதிலும் மாநாட்டின் துவக்க நாளன்று மேடையில் நாற்காலிகளை ஒழுங்குபடுத்துவது, மைக்கைத் தட்டி சரி பார்ப்பது என்று ஸ்டாலின் சுற்றிச் சுழன்றதைப் பார்த்து அரங்கமே 'அடேங்கப்பா' ஆனது. கனிமொழி, வி.ஐ.பி.க்கள் அமர்ந்திருந்த பகுதிக்குச் சென்று ஒவ்வொருவரையும் வாங்க.. வாங்க.. என்று அசத்தல் கும்பிடு போட்டு உபசரித்தார். முன்வரிசையில் உட்கார்ந்திருந்த காந்தி அழகிரியின் கன்னத்தைத் தட்டி சிலாகித்த கனிமொழி, அருகில் கணவர் சகிதம் அமர்ந்திருந்த கயல்விழிக்கும் ஒரு 'ஹாய்'! முக்கிய விருந்தினருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கும் பொறுப்பும் கனிமொழிக்கே!

### குழுமிய குடும்ப உறவுகள்!

முதல்வர் கருணாநிதியின் கொள்ளுப் பேரன்கள் வரை குடும்ப உறவுகள் மாநாட்டில் எங்கும் தென்பட்டனர். "அவங்கதான் ஸ்டாலின் மருமகன்! இவங்கதான் அழகிரி மருமகன்..." எனச் சுட்டிக்காட்டி உள்ளம் பூரித்தனர் உடன்பிறப்புகள். மொத்தமாக, கருணாநிதி குடும்பத்தைச் சேர்ந்த 84 பேர் மாநாட்டுக்கு வந்திருந்ததாகச் சொல்கிறார் குடும்ப உறவுகளை நன்கறிந்த பத்திரிகையாளர் ஒருவர். அரங்கின் இடப்பக்கம் அவர்களுக்கென்று ஒதுக்கியிருக்க...அவர்களோ அரங்கின் முன்பகுதியிலும் பரவலாக அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளை ரசித்தனர். இதனால், சில மாண்புமிகுக்களுக்கு இருக்க இடம் கிடைக்கவில்லை.




### காலை ஸ்டாலின்...மாலை அழகிரி!

ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் தொடக்கி வைத்தபோது, மேடையில் இருந்து எல்லோரையும் வரவேற்றார் துணை முதல்வர் ஸ்டாலின். மேடைக்கு எதிரே கீழே அழகிரிக்கு நாற்காலி போட்டிருந்தார்கள். ஸ்ராலின் உரையாற்ற அழைக்கப்பட்டபோதும், விருந்தினர்களுக்கு அவர் சிறப்புச் செய்தபோதும், 'தளபதி வாழ்க' என்ற கோஷம் பெரிதாக ஒலித்தது. அதைக் கவனித்தாரோ என்னவோ...தம் பக்கத்திலிகிருந்து துரைமுருகன், தயாநிதி மாறன் ஆகியோருடன் சிரித்துப் பேசியபடி இருந்தார் அழகிரி.

அன்று மாலையில் நடந்த ஊர்வலத்தைப் பார்வையிடுவதற்காகப் போடப்பட்ட மேடையில் அழகிரி அமர வைக்கப்பட்டார். கவர்னர், ஜனாதிபதி, முதல்வர், பேராசிரியர் வரிசையில் ஸ்டாலின் அமர இருக்கை போடப்பட்டிருந்தது. அந்த இருக்கையில் அழகிரி அமர்ந்ததால்...ஸ்டாலின் கவர்னருக்குப் பக்கத்தில் சென்று அமர்ந்து கொண்டார்.

### பாவம் தமிழறிஞர்கள்

'இனியவை நாற்பது' என்ற தலைப்பில் அமைந்திருந்த அட்டகாசமான அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பைப் பார்வையிடுவதற்காக தனிமேடைகள் போடப்பட்டிருந்தன. 'சிறப்பு அழைப்பாளர்கள்' என்ற பகுதியில் தயாளு அம்மாள், செல்வி, காந்தி அழகிரி, துர்கா ஸ்டாலின், கிருத்திகா, ராசாத்தி அம்மாள், கனிமொழி, தமிழரசு, செல்வம் மற்றும் அவர்கள் குடும்பம் என்று கோபாலபுரம் உறவுகளின் கூட்டம். இவர்கள் பின்னால் நின்றவாறு ஊர்வலத்தை எக்கி எக்கிப் பார்த்தபடி காணப்பட்டார் மூத்த தமிழறிஞர் வா. மு. சேதுராமன்.

### வீணையும் - கவிதையும்

24ஆம் திகதி மாலை கருணாநிதி மகள் செல்வியின் மகள் எழிலரசி ஜோதிமணியின் வீணை இசை. 25ஆம் திகதி கவிஞர் வைரமுத்து தலைமையில் கவியரங்கம் இதில் அழகிரியின் மகள் கயல்விழி இறுதியில் இடைச்செருலாக்கப்பட்டார்.

### கருணாநிதியின் தற்புகழ்ச்சி

முதல்நாள் விழாவில் மு. கருணாநிதி தலைமையுரையாற்றியபோது பலரும் முகம் சுளித்துக் காணப்பட்டனர், தமது பெற்றோரின் பெயர், 14 வயதில், 17 வயதில் 20 வயதில் தான் என்ன செய்தேன் என்றவாறு தம்மைப்பற்றியே புகழாரம் சூட்டிக்கொண்டு போனார் கருணாநிதி. இந்த விழாவைத் தமக்கான பாராட்டு விழாவாக மாற்றுவதில் மிகவும் அக்கறை காட்டினார். முதல்நாள் விழாவில்

(33ஆம் பக்கம் வருக)

**உதாசனன்**
**உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம்

# நீறுமடா கொலைவெறியர் கொற்றம்!

அன்றைய ஆடி எண்பத்து மூன்றில்
கொன்று குவித்தாய் கொழும்பு போலும்
சிங்கள நகர்கள் தெருக்களில் தமிழரை!
பொங்கெரிக் குள்ளே உயிருடன் போட்டும்,
சுட்டும், அடித்தும், வெட்டியும், சேய்களைச்
சுடுதா ருக்குள் தூக்கி எறிந்தும்
படுபா வீ,மூ வாயிரம் தமிழரைக்
கொன்று குவித்தாய்! குலைந்தப் பழியால்
அகதிக ளாய்ப்பத்து லட்சம் தமிழரை!
மிகமகிழ்ந் திருந்தாய் விரட்டிய வெற்றியில்!

அன்றி லிருந்து சென்ற'மே' வரைக்கும்
காலநூற் றாண்டு கலங்கினாய் தமிழனால்!
அம்மேயில் மட்டும் 'அம்மே' என்றென்று
முப்பத்தீ ராயிரம் படைபலி கொடுத்தாய்!
இப்பொழு தென்ன, வென்றா இருக்கிறாய்?

நாடு கடந்த தமிழீழ அரசு
பீடு தழுவிப் பிறந்துள்ள தின்று!
சனநா யகவழி தம்மில் உலகோர்
மனங்களில் எல்லாம் எங்கள் விடுதலை
அவசியம் தன்னை ஆழப் பதிப்போம்!
புவிமனச் சாட்சியைப் புயலாய்க் கிளப்புவோம்!

* * *

கறுப்பாடி விரட்டியதால்
கண்டமெல்லாம் புலம்பெயர்ந்தோர்
ஒறுத்த மேயின் படுகொலையால் விழித்தோம் - ஓர்நாள்
ஓடி வந்துன் அட்டகாசம் ஒழிப்போம்
அனைத்துலக ஈழமன்றம்
அமைக்கும் தனி ஈழம் உங்கு!
நினைத்தழு வாய் நீபுரிந்த குற்றம் - பாவீ
நீறுமடா கொலைவெறியர் கொற்றம்!

* * *

ஊரே நாளும் ஓங்கி எரிகையில்
'நீரோ' போல யாழ்மீட்டி நிற்கோம்!
ஒவ்வோர் தோல்வியும் ஓர்படிக் கல்லாய்
எவ்வா றெழுவோம் எனநீ காண்பாய்!
திரும்பப் பார்த்தே சென்ற பாதைகள்
பெரும்பொறுப் புணர்வுடன் பிழைகள் தவிர்ப்போம்!

அழிக்கப் படும்விதி அற்றவ னேல்,நான்
அழிக்க என்னை முடிந்திரா துன்னால்!
என்னை அழித்த என்விதி படைத்தவன்
என்னைத் தவிர எவன்? நானேதான்!
"யாதும் ஊரே, யாவரும் கேளிர்!" -
ஓதிய தொல்பா உரைத்ததே இந்தத்
"தீதும் நன்றும் பிறர்தர வாரா" -
நீதிக் கூற்றும், நினைத்தினி நடப்போம்!
நல்லன எண்ணியும், நவின்றும், செய்தும்
நல்லதோர் நம்விதி நாட்டப் புகுந்துளோம்!
பழைய பிறவிப் பழிவிதி தம்மை
அழுதிறை வேண்டி அழித்திடு கின்றோம்!

"இல்லாக் கடவுளை இருக்கிறார் என்கிறான்!" -
பொல்லாக் கள்ளிசை புன்மொழி பழித்தோம்!
குருக்களால் பிரபலம் தேடிட, இன்றேல்
குருக்களில் குற்றம் பிடித்திட என்று
கோவில் சென்று பாவம் குலவோம்!
ஓரிறை பணிய ஒருப்படா அகந்தையால்
பாரில்,பல் லாயிரம் பாவிக்கால் வீழ்ந்து
பூண்டோ டழியும் வீண்செயல் தொடரோம்!
இறையருள் வேண்டுமோ? நிறைநிதி வேண்டுமோ?
அறை!"எனக் கேட்டால் அர்ச்சுனன் போல
'இறையருள் தா'என் றிருகை எந்துவோம்!

ஓடி யாடி உழைக்கும் தொண்டினை
நாடு நாடாய் இளையோர் புரி,
கூடிக் கூடிக் கூனல் முதியவர்
பாடிப் பரவிப் பரமனை வேண்டுவோம்!
எங்கள் தனித்துவம், இறைமை, காப்புத்
தழுவி வாழும் தன்னாட்சி வலிமை
ஒளிபெற நல்கென உருகிக் கேட்போம்!

அறத்தில், இறைமேல் ஆர்வக் குறைவால்,
இறுக்கமார் ஒற்றுமை இனப்பற் றின்மையால்
ஆசி,அ மேரிக்கா, கனடா ஆதி
வாசிகள் அங்கங்கு வலுகெட் டொழிந்தமை
தனையுணர் தமிழர் தரித்திருப் போமா?
இனியும் உறங்கி எமைஅழிப் போமா?

குடும்பத்தின் மேலாய், குடும்பமும் நலம்பெற
நேசிக்கி றோம்இன்றெம் தேசத்தின் விடிவையே!
நாடின்றி நமதென்றோர் விடில்லை! கண்டோம்!

சொந்த நலன்களைச் சுகமாய் அடையும்
தந்திர மாகத் தமிழீழ விடுதலைத்
தொண்டனாம் போர்வையைக் கொண்டிடோம் எவரும்!
அன்பால் இணைவோம்! வன்முறை தவிர்ப்போம்!
உணர்ந்தும், விழைந்தும், அணியில் இணைவோம்!
இலக்கீழ விடுதலை என்பதே கொள்ளும்
இலக்கியம், கலைகள் எங்கும் செய்வோம்!
எல்லாம் எனக்கே தெரியும் என்னோம்!
நல்லன சொன்னால் நயந்தேற் கின்றோம்!

* * *

அனைத்திலக ஈழமன்றம்
அமைக்கும்தனி ஈழம் உங்கு!
நினைத்தழுவாய் நீபுரிந்த குற்றம் - பாவீ
நீறுமடா கொலை வெளியர் குற்றம்! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க் **வீ. சிறிகதிர்காமநாதன்**

2

# புலம் பெயர்ந்தோர் உளவியல்



எதுவித வழமையான ஆச்சார கதைகள் எதுவும் இல்லாது, நாங்கள் நேரே விடயத்திற்கு வருவோம் எனக் கூறி சமூக ஆலோசனையாளர் ஆரம்பித்தார்.மஞ்சுவின் குடும்ப வைத்தியர் மஞ்சுவிற்குக் கூறிய விடயத்தைக் கூறி, உடனடியாக கருச் சிதைவு எப்படிச் செய்யப்படும் என்ற விபரத்தை தாய்-சேய் நல மருத்துவத் தாதி விபரிப்பார், வைத்தியசாலைக்கும் சேர்ந்து வந்து உதவி செய்வார் என மஞ்சுவின் கருத்தைக் கேளாது, எல்லாவற்றையும் கூறி முடித்தார்' உள் அறையில் தன் எதிரிகள் முகமோ, அவர்கள் மூச்சுக் காற்றோ படக்கூடாது என உள்ளிருந்த மூர்த்தி, திடீரென வேகமாக வந்து தன் சுய கட்டுப்பாடு இழந்து, பல வார்த்தைகளை தனக்கு இயன்ற டெனிசில் முழங்கினார்.

இது முதற் தடவையல்ல. சில நேரத்தில் தப்பினோம் பிழைத்தோம் என வாரிச்சுருட்டிக் கொண்டு ஓடிய அனுபமும் இந்த சமூக சேவையாளருக்குண்டு. இதனால் இருந்து கதைப்பதில் பிரயோசனம் இல்லை என்று நினைத்து, பெற்றோரின் கவனத்தை திசை திருப்ப - உங்களுக்கு உளவியலாளருடன் கதைக்க விருப்பமா எனக் கேட்டபோது, இவர்களும் உடனே உடன்பட்டார்கள்.

மீண்டும் பெற்றோர்களுடன் தாம் ஒர் பெண்குழந்தைக்கு நோன்பு இருப்பதாகவும், இது முக்கியமான குழந்தை ஊரில் சாஸ்திர விற்பன்னர்கள், பெண் குழந்தைக்குரிய நேரம் என குறி சொல்லி உள்ளார்கள் என்றார்கள். இன்னும் பல உருக்கமான விளக்கங்களுடன் என்னைத் தயார்படுத்தி சமூக ஆலோசனையாளருக்குத் தூது விட்டார்கள். அவர்களுடன் கதைத்துப் பச்சைக் கொடி காட்டப்பட்டது. அத்துடன் இதற்குமேல் பிள்ளைகள் எதுவும் திட்டமிடக் கூடாது என்ற எச்சரிக்கையும் விட்டார்கள். எதிர்பார்த்தபடி பெண் குழந்தையும் பிறந்து, வளர்ந்தது.

Flash back 111

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர்:
மஞ்சு மீண்டும் கருத்தரித்தார். மீண்டும் அதிர்ச்சி வைத்தியங்கள். மற்றும் உளவியலாளர் இப்போ பெற்றோரின் விளக்கம் மிகவும் சுவாரசியமானது. அதாவது ஊரிலிருந்து பல கடிதங்கள், தொலைபேசிக் கருத்தாடல்கள். எல்லாமே ஒரே விடயத்தைச் சொல்கின்றனவாம். மூன்று ஆண் பிள்ளைகளுக்கு ஒரு பெண் பிள்ளை இருந்தால், மூன்று அடுப்புக் கற்களையும், பானையையும் குறிக்குமாம். இது முழுக் குடும்பத்திற்கும் கெடுதல் செய்யுமாம். அதனால் அடுப்பு பானை நிலையை மாற்றுங்கள் என வேண்டுகோள்களின் மேல் வேண்டுகோள்கள். இது பிரமனின் செவிக்கும் கேட்டுவிட்டது. மஞ்சு கருத் தரிக்கும் வாய்ப்பைப் பெற்றாள்.

இந்த கலாசார பழைய நம்பிக்கை பற்றி பிரபல்யமான கருத்துப் பரிமாற்றம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இங்கு பெற்றோர்கள்தான் கதாநாயகர்கள். இதனால் உளவியலாளரின் தூது மிகவும் கருத்து ஆதாரங்களுடன் தேவைப்பட்டது. இதன்படி சமூக ஆலோசனையாளர்கள், அவர்கள் தலைவி அடங்கலாக விளக்க வகுப்பு நடத்தப் பட்டது. முடிவில் கலாச்சார விழுமியத்திற்கு ஆமோதிப்புக் கிடைத்தது. ஐந்தாவது பிள்ளையும் ஜனனம்.

இனி எமது விடயத்திற்கு வரலாம். மேலே சுருக்கமாக விபரிக்கப்பட்ட ஒரு இளம் தமிழ்க் குடும்பம், தான் தனது ஊரில், தன் குடும்பத்தில், சமூகத்தில், கலாசாரத்தில் கற்றுக் கொண்ட உயரிய மேன்மையான விழுமியங்களை தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு புலம்பெயர் நாட்டில் வாழத் தலைப்பட்டது. அவர்களைப் பொறுத்தவரை தமது கலாசார விழுமியங்களை நெறி தவறாது பின்பற்றுவதில்தான் உள அமைதி, உளத் தெளிவு என்பன உள்ளடங்கி உள்ளது. அவர்களைப் பொறுத்தவரை புலம் பெயர் நாட்டுக்கு வந்து தாமாக தமது வாழ்வினை சுதந்திரமாக நடத்தும் வரை எந்த மாற்றுக் கருத்துகட்கும் உள்ளாகவில்லை. ஏதாவது பிரச்சனைகள் பிள்ளைகள் சம்பந்தமாக வரும்போது, தொலைபேசியில் தம் குடும்பத்தினருடன் கதைத்து ஆலோசனை செய்வார்கள்.

அத்துடன் ஊர்ச் சுவாமிகளுக்கும் நேர்த்திகள் வைத்து அவர்கள் குடும்பத்தினரால் நோன்பிருந்து நிறைவேற்றப்பட்டு, மந்திரிக்கப்பட்ட நூலாகவும், விபூதி பிரசாதங்களாகவும் டென்மார்க்கிற்கு வந்துகொண்டிருந்தது. இந்த முறையினூடாக பெற்றோர் இருவரும் நல்ல உள சாந்தியுடன் காணப்பட்டார்கள். பிள்ளைகளை 'பாலர் பூங்கா' நிலையத்திற்கு விட ஆரம்பித்த பின்னர்தான் மேலே விபரிக்கப்பட்ட சிக்கல்கள் தோன்றி, இடைவிடாது அவர்கள் உள அமைதி, உடல் நலத்தையே கெடுத்து விட்டது. இதன் தார்ப்பரியத்தை சிறிது விரிவாக, புலம்பெயர் உளவியல் சிந்தனை முறையில் ஆய்வோம். இதுவரை விபரிக்கப்பட்ட அறிமுகப்படுத்தப்பட்ட விடயதானத்தை புலம் பெயர் அறிவியல் முறையில் நோக்கும் போது இரு முக்கிய தளங்கள் இருப்பதனையும், அவற்றிற்கு இடையே உள்ள தகவல் பரிவர்த்தனை தொடர்பாடல் முறைமை எப்படியானது என்பதையும் பின்வரும் மாதிரி உருக்கள் ஊடாக பார்க்க முடியும்.

மேலே இரு வகை மாதிரிகள், 'A', 'B' அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதில் மாதிரி 'A' புகலிட சமூகத்திற்கு, உதாரணம் டென்மார்க், கனடா, பிரித்தானியா புலம் பெயர் மக்கள் தொகுதி சமூகங்களாக இடம் பெயர்ந்து வந்து வசிக்கும் போது, இரு சமூகக் குளுக்களிடையே எப்படியான தக அமைவு வடிவங்கள் இயங்கத் தொடங்குகின்றன என்பதை விபரிக்கின்றது. மாதிரி 'B' மேலே குறிப்பிட்ட புகலிட- புலம்பெயர் மக்கள் தொகுதிகள் நீண்ட கால ஓட்டத்தில் சந்ததி விருத்திக்கு ஊடாக எப்படி புலம் பெயர் உளவியல் பண்புகளுக்கு ஊடாக தக அமைகின்றது என்பதனை விளக்குகின்றது.

இந்த இடத்தில் புலம்பெயர் உளவியல் என்றால் என்ன என்பதை விளக்கிச் சொல்வது நன்று. முதலில் புலம் பெயர்தல் என்பதை விளங்க ஊரில் நெல் நாற்று நடலை உதாரணமாகக் கொள்ளலாம். வெள்ளத்தினால் அழிக்கப்பட்ட வயலில் நாற்று நடுதலையோ, வயலை சேறாடி நாற்று நட்டு பயிரிடுதலையோ குறிப்பிடலாம். வேறு வயலில் இருந்தோ, நாற்று மேடையிலிருந்தோ பயிர் பிடுங்கப்பட்டு, இன்னோர் சூழலில் (வயலில்) பதிவைக்கப்படுகிறது. பயிரை பிடுங்கும் போது பல வேர்கள் அறுந்து போகின்றது. பின்னர் கொண்டு வந்து நடும் போதும், வேர்களுக்குச் சேதம் ஏற்படுகின்றது. இப்படியாகப் புது வேர்கள் விட்டு, குருத்துவிட ஒரு சில கிழமைகள் எடுக்கின்றது. ஒரு சில பயிர்களின் புது வேர்கள் அழுகிப் பட்டும் போகின்றது.

(26ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# கவர்ச்சிமிகு கணினிப் பெண் ஐ-பாட் - iPad

இலத்திரனியல் உலகில், விந்தைகளை ஒட்டுமொத்தமாய்க் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, கணினிப் பாவனை யாளர்களை வியக்க வைப்பதில், அப்பிள் (Apple) நிறுவனத்திற்கு நிகரேதும் இல்லை என்கிறார்கள் கணினித்துறைசார் நிபுணர்கள்.

மக்கின்ரோஸ் அல்லது மாக் (Mac) என்று அறியப்பட்ட கணினி வகை உட்பட, ஐஃபோன், ஐபொட் என்று இலத்திரனியல் புரட்சிகளை நிகழ்த்திக் காட்டிய அப்பிள் நிறுவனம், தற்போது ஐபாட் (iPad) என்ற இந்தப் புதிய கருவியை அறிமுகம் செய்துள்ளது.


அடிப்படைக் கணினித் தேவைகளுக்கான மடிக்கணினியையும், ஐஃபோன் வழங்கிய அனைத்து சேவைகள், மற்றும் இசையோடு சம்பந்தப்பட்ட ஐபொட் வழங்கிய அனைத்து சேவைகளையும் உள்ளடக் கியதாக, விரலால் தொட்டு இயக்கத்தக்க (touch screen) முகத்திரை யுடன், ஒரு புதிய கருவியை அப்பிள் நிறுவனம் வெளியிடவிருக்கிறது என்ற தகவல் சில வருடங்களாகக் கசிந்த வண்ணமிருந்தன. இதற்கான பெயராக, அப்பிள்ஸ் ராப்லட் (Apple's Tablet), ஐ-ராப்லெட் (iTablet), ஐ-சிலேட் (iSlate) போன்ற பெயர்கள் ஊகங்களாக வெளியிடப்பட்டன.

இவ்வருடம் ஜனவரி 27ம் திகதி, அப்பிள் நிறுவன அதிபர் திரு.ஸ்ரீவ் ஜொப்ஸ் உத்தியோகபூர்வமாக சான் பிரான்சிஸ்கோ நகரில் இந்தப் புதிய கருவியை அறிமுகம் செய்து, ஐபாட் (iPad) என்பதே அதற்கான புதிய பெயர் என்பதையும் உறுதி செய்தார். மார்ச் 12ம் திகதி முதல், அமெரிக்காவில் ஐபாட் பெறவிரும்புவோர் முன்பதிவு செய்வதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

கம்பியில்லாத் தொடர்புடன் செயற்படும் (Wi-Fi or Wireless) வகையிலமைந்த இந்த ஐபாட், கையிலே வைத்து ஒரு புத்தகத்தைப் பார்ப்பது போன்ற அழகிய வடிவத்தைக் கொண்டதாக, ஏப்ரல் 3ம் திகதி, அமெரிக்காவில் பிரத்தியேகமாக சந்தைக்கு வந்தது. ஏப்ரல் 30ம் திகதி, 3ஜீ (3G) எனும் மேலதிக தகுதரம் கொண்ட புதிய ஐபாட் விற்பனைக்கு வந்தது. மே 28ல், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளிலும் விற்பனைக்கு வந்தது ஐபாட். யூலை மாதத்தில், மெக்சிக்கோ, சிங்கப்பூர், ஹொங்கொக், அயர்லாந்து என்று இன்னும் பல நாடுகளில் சந்தைக்கு வரவிருக்கிறது ஐபாட். மே 3ம் திகதிக்குள் 1 மில்லியன் ஐபாட் விற்கப்பட்டதாகவும், மே 31ம் திகதிக்குள் 2 மில்லியன் ஐபாட் விற்றுத் தீர்ந்ததாகவும் அப்பிள் நிறுவனம் தகவல் வெளியிட்டது.

விரலால் தொட்டு இயக்கத்தக்க செயற்திறனுடன், வண்ணத்திரை, அழகான தோற்றம், மிகப்பெரிய திரை என்று ஒரு கவர்ச்சிக் கணினிப் பெண்ணாக காட்சி தருகிறது ஐபாட். அழுத்திகளைத் தொட்டு இயக்கத்தக்க அதேவேளை, விரும்பினால் பாவிக்கத்தக்க வகையில் தட்டச்சு வாய்ப்பும் (keyboard) பெரிய எழுத்துக்களாக வழங்கப்பட்டுள்ளன.

ஒரு மடிக்கணினியாகப் (laptop) பாவிக்கத்தக்க வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஐபாட், மேலதிகமாக, ஐஃபோனிலுள்ள அனைத்து வசதிகள், ஐபொட் வழங்கிய இசையுலகின் அனைத்து வசதிகள், இவற்றுடன் பெரிய திரையில் படங்களைப் பார்க்கத்தக்க வசதி, புளூருத், ஜி.பி.எஸ்., என்று அனைத்தையும் உள்ளடக்கியதாக, தொலைக்காட்சியோ மடிக்கணினியோ இல்லாமல், கணினி விளையாட்டுக்களை பெரிய திரையில் ஆடவும், ஃபோட்டோ வீடியோ படங்கள், கலண்டர், ஈமெயில் பாவனை உட்பட, இணையத்தை மிகப்பெரிய திரையில், எந்த இடத்திலிருந்தும் இணைப்பை ஏற்படுத்தி மேய்ந்துவர ஏதுவாக, ஒட்டுமொத்தத்தில் அனைத்தையும் ஒரு சாதனத்தில் செய்யத்தக்கதாக வெளிவந்திருக்கிறது ஐபாட் (iPad).




ஸ்ரீவ் கரங்களில் ஐ-பாட்

ஏற்கனவே ஐஃபோன்களிலுள்ள வசதியான, கருவியை எந்தப் பக்கமாகத் திருப்பினாலும், படங்கள் அல்லது ஈமெயில் தகவல்களும் தானாகவே திரும்பி நாம் பார்ப்பதற்கு ஏதுவாகத் தோன்றுவது மற்றும் விரல்களால் இழுத்து அங்குமிங்கும் கொண்டு செல்லவும், விரல்களால் பிடித்து படங்களை அல்லது திரையை விரிக்கவும் சுருக்கவும் முடிகிறது. யாஹூ, ஜீமெயில், மெயில், ஹொட்மெயில் என்று அனைத்து மின்னஞ்சல் தளங்களுடனும் இயைந்து செயற்படுகிறது ஐபாட்.

வீடியோ காட்சிகளின் தெளிவு பிரமிக்க வைக்கிறது. ஐபொட் வகையை ஒத்ததாக, பாடல், பாடியவர், பாடல் வகை என்று வகைப்படுத்தவும், ஒலிபெருக்கி (speaker), புளூ ருத் (blue tooth), காதுபொருத்தி (headphone) மூலம் கேட்கும் வசதிகளும் உள்ளன. ஸ்பொட்லைட் (Spotlight) என்ற விசேட தேடல் வசதி மூலம், ஐபாட்டில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் பொதுவான தேடுதல்களை மேற்கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, ஐ-புக் (iBook) இலத்திரனியல் நூல்களை, தரவிறக்கம் செய்து திரையிலே ஒரு புத்தகம் போல வாசிப்பதற்கும் வசதி கிடைக்கிறது.

இவ்வளவு நல்ல விடயங்களுக்கிடையே சிரமங்களும் இல்லாமல் இல்லை. ஐஃபோன் போன்றவற்றிலுள்ள கமரா (படக்கருவி) வசதி ஐபாட்டில் இல்லை. மேலதிக சேமிப்பு அதிகரிப்பிற்கான மெமரி கார்ட் (memory card) வாய்ப்பு இல்லை. ஜாவா போன்றவற்றைப் பயன்படுத்துவதிலும் இழுபறிகள் உள்ளன.

இலத்திரனியல் உலகில், குறிப்பாக கணினி உலகில் போட்டிபோடும் முன்னணி ஜாம்பவானாக உருவெடுத்துள்ள கூகிள் நிறுவனம், கூகிள் நெக்சஸ் எனும் ஒரு நவீனவகை கணினியை, ஐஃபோன், ஐபொட் போன்ற அனைத்து வசதிகளும் கொண்டதாக வெளியிடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

கூகிள் நிறுவனத்தை வீழ்த்துவதாக இருந்தால், நெக்சஸ் வருவதற்கு முன்னர் முந்திக் கொள்வதே ஒரே வாய்ப்பு என்பதை உணர்ந்துகொண்ட அப்பிள் நிறுவனம், திடுதிப்பென ஐபாட்டை பலரும் வாங்கத்தக்க மலிவு விலையில் விற்றுத் தீர்த்திருக்கிறது. மடிக்கணினி ஒன்றை வாங்குவதாக இருந்தால், குறைந்தது 500 டாலர்கள் தேவை. ஐஃபோன் வாங்குவதாக இருந்தால் குறைந்தது 200 டாலர்கள். ஐபொட் வாங்க 100 டாலர்கள்.

(22ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழ் இளையோர் இணைய விருது வைபவம்



கனடியத் தமிழ் இளையோர் இணையத்தின் முதலாவது வருட விருது வழங்கும் வைபவம் கடந்த மாதம் ரொறன்ரோவில் இடம்பெற்றது. இளையோரின் கலை நிகழ்ச்சிகள் பல இங்கு இடம்பெற்றன. விழாவில் விருதுகள் பெற்றவர்கள் விபரம்:

**Academics**: Tamil Lamguage: Tharmya Gengathata. **Achievement Category:** Leadership - Jassica Devi Chandrasekar, Volunteerism - Anojini Kumaradasan, Youth Entrepreneur - Ryan Nesharatnam. **Arts Category:** Classical Music - Saibruntha Arunthavashanmuganathan, Classical Dance - Malarvilly Varatharaja, Visual Arts - Prashanth Selvakumar, Urban Music - Rajiv Sathiyaseelan. **Athletics Category:** Basketball - Deluxshan Pathmanathan, Soccer - Janarthan Sadadcharalingam, Track and Field - Abirami Shanmugaratnam. (ஒளிப்படம்: 'நினைவுகள்' தளம்)

# ஒன்ராறியோ தன்னார்வத் தொண்டர் சேவை விருது வைபவம்




ரொறன்ரோ நகருக்கான ஒன்ராறியோ அரசாங்கத்தின் வருடாந்த தன்னார்வத் தொண்டர் சேவை விருதுகள் வைபவம் ஜுன் 16ஆம் திகதி இடம்பெற்றது. ஒன்ராறியோ அரசின் குடிவரவு பிரஜாவுரிமைகள் அமைச்சர் டாக்டர் எரிக் ஹொஸ்கின்ஸ் இதில் அதிதியாகக் கலந்து விருதுகளை வழங்கி தொண்டுச் சேவையாளர்களுக்கு மதிப்பளித்தார். 'தமிழர் தகவல்' சஞ்சிகை வெளியீட்டகத்தின் சார்பில் ஆறு பேர் இவ்வருடம் விருது பெறத் தெரிவாகியிருந்தனர். எழுத்தாளர் அ. முத்துலிங்கம், கட்டுரையாளர்கள் எஸ். கணேஷ், சிவா கணபதிப்பிள்ளை, இளம் தொண்டர் சுரேகா கிருஷ்ணசாமி ஆகியோர் வைபவத்துக்குச் சமூகமளித்து தமக்கான விருதினை அமைச்சரிடமிருந்து பெற்றுக் கொண்டனர். வைபவத்துக்கு நேரடியாகச் சமூகமளிக்காத வெளியீட்டுத் தொண்டர்கள் நா. குமாரதாசன், எஸ். திருமுருகா ஆகியோருக்கான விருதுகள் அனுப்பி வைக்கப்பட்டது. (ஒளிப்படம்: தமிழர் தகவல் வெளியீட்டகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் காப்போம்
## *நிதி சேகரிப்பு நிகழ்வு*




கடந்த மாதம் (யூன்) 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் "நலம் காப்போம்" நிதி சேகரிப்பு நிகழ்வு ஐயப்பன் ஆலய மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இலங்கை வடக்கு கிழக்கில் பணியாற்றுகின்ற நான்கு உளநல மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தது இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திலிருந்து டாக்டர் முல்லை பரமேஸ்வரன், கல்முனையிலிருந்து டாக்டர் ஜூடி ஜெயக்குமார், வவுனியாவிலிருந்து டாக்டர் சுதாகரன் மற்றும் வாழைச்சேனையிலிருந்து டாக்டர் டான் சௌந்தராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





அனைத்துலக மருத்துவ நல அமைப்பானது இந்த நான்கு மருத்துவர்களுடன் பல தொண்டு நிறுவனங்களுடனும் இணைந்து கடந்த சில வருடங்களாக பல்வேறு மன நல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம், கல்முனை, வவுனியா ஆகிய இடங்களில் மருத்துவ சாலை மனநோயாளர் சிகிச்சைப் பிரிவை நிறுவிப் பராமரித்து வருவதுடன் பல்வேறு கிராமப்புறங்களில் நடமாடும் மனநல மருத்துவ சேவைகளையும் ஆற்றி வருகின்றது.





இலங்கையில் இருந்து வருகை தந்திருந்த நான்கு வைத்தியர்களும் தாங்கள் பட்ட துயரங்களை விபரமாக விளக்கியதுடன், புலம் பெயர் மக்கள் செய்த உதவிகளுக்கு குறிப்பாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பு காலமறிந்து செய்த பொருத்தமான உதவிகளுக்கு நன்றி தெரிவித்தும் உரையாற்றினார்கள். அத்துடன் தத்தமது மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் மருத்துவ தேவைகளையும் குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட மக்களின் அத்தியாவசிய, சுகாதார மற்றும் மனநல தேவைகளைப் பற்றி தாங்கள் கொண்டு வந்திருந்த விவரணப்படங்களின் ஊடாக விபரமாக விளக்கினார்கள். குறிப்பாக டாக்டர் ஜூடி அவர்கள் உரையாற்றுகின்றபோது மக்கள் போர்களங்களில் பட்ட அவலங்களையும் தற்போது இடப்பெயர்வினால் மக்கள் படும் துன்பங்களையும் மிக உருக்கமாக விபரித்தார்.





இந்நிகழ்வானது தாயக உறவுகளின் தற்போதைய தேவைகள் என்ன அவற்றைப் பூர்த்தி செய்ய அனைத்துலக மருத்துவ நல அமைப்பு உருவாக்கியுள்ள திட்டங்கள் என்ன அவற்றில் கனடா வாழ் மக்கள் எவ்வாறு பங்கெடுத்து உதவலாம் என்பவற்றை விளக்குவதாக அமைந்திருந்தது. அதிலும் குறிப்பாக ஊர்ச்சங்கங்கள் சில பெருந்தொகைப் பணத்தை நேரடியாக வருகை தந்து அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் தலைவரிடம் கையளித்ததை அவதானிக்க முடிந்தது. அத்துடன் CTR வானொலி அறிவிப்பைக் கேட்டு வியந்த அன்பர் ஒருவர் ஊனமுற்றோருக்கான புனர்வாழ்வுத் திட்டத்துக்காக $2400 அன்பளிப்பாக வழங்க முன்வந்ததையும் குறிப்பிடலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியத் தமிழர் தேசிய அவைத் தே
# National Council of Canadian T

மேல் வரிசை ஒளிப்படங்கள் தேசியப் பட்டியல் பிரதிநிதிகள்


கவிதா செந்தில்குமரன்
25,016


மோகன் ராமகிருஸ்ணன்
24,885


நீதன் சண்
24,338


ராஜ் சுப்பிரமணியம்
23,770


திவா பரம்சோ
21,617


பிரபா நல்லையா
22,900


தேவா சபாபதி
22,353


மகேந்திரன் மாணிக்கம்
21,294


நந்தினி விஜயபவன்
10,204


லக்ஷி சிறிதரன்
10,132


நான்சி கமலநாதன்
23,358

அசே

கனடியத் தமிழர்களின் தாய் அமைப்பாகவும், கனடியத் தமிழர் அமைப்புகளின் கூட்டமைப்பாகவும் உருவாகியிருக்கும் கனடியத் தமிழர் தேசிய அவைக்கான தேர்தல் ஜுன் மாதம் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடா தழுவிய ரீதியில் இடம்பெற்றது. 37 நிலையங்களில் காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை வாக்களிப்பு நடைபெற்றது.

மொத்தம் 29,303 பேர் மிகுந்த ஆர்வத்துடன் வாக்களிப்பில் பங்குபற்றியிருந்தனர். தெரிவான 22 பேரில் ஒன்பது பேர் தேசியப் பொதுப்பட்டியலிலும், 13 பேர் மாகாணப் பட்டியலிலும் தெரிவாகினர். இரண்டு பட்டியலிலும் தலா இவ்விரண்டு இடங்களாக மொத்தம் நான்கு இடங்கள் பெண்களுக்கும், நான்கு இடங்கள் இளையோருக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது.

நான்கு பெண் உறுப்பினர்களும் போட்டியின்றித் தெரிவாகியிருந்தனர். ஆனாலும் இவர்களுக்கான மக்கள் அங்கீகாரம் பெறுவதற்காக இவர்கள் பெயர்களும் வாக்குச் சீட்டில் சேர்க்கப்பட்டிருந்தது.

இந்தத் தேர்தலின் மற்றொரு அம்சமாக, பிராந்திய அவைகளுக்கான தேர்தல்களும் இடம்பெற்றது. ரொறன்ரோ மேற்கு (3), பீல் (5), யோர்க் (7) பிராந்தியங்களுக்கான தெரிவு போட்டியின்றி அமைந்தது. ரொறன்ரோ கிழக்குப் பிராந்தியத்துக்கு ஏழு பேரைத் தெரிவதற்காக எட்டுப் பேர் போட்டியிட்டதால் இங்கு தேர்தல் நடைபெற்றது.

தேசிய அவைக்கு 22 உறுப்பினர்களும், பிராந்திய அவைக்கு 22 உறுப்பினர்களுமாக மொத்தம் 44 பேர் தெரிவாகியுள்ளனர். இரண்டு அவைகளுக்கும் தெரிவான பத்துப் பெண்களில் எட்டுப் பேர் தேசிய அவைக்கானவர்கள். தேசிய அவைக்கான பொதுப்பட்டியலில் தெரிவான கவிதா செந்தில்முருகனே இந்தத் தேர்தலில் அதிகூடியதாக 25,016 வாக்குகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இவர் தமிழ் மகளிர் அமைப்பின் பொறுப்பாளராவார்.

பொதுப்பட்டியலில் இளையோர் பிரிவில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கிருஷ்ணா சரவணமுத்து (24,704 வாக்குகள்), சிவா விமலச்சந்தரன் (23,774 வாக்குகள்) ஆகிய இரு மாணவரும் பல்கலைக் கழக மாணவர் சமூகத்தில் நன்கு பிரபல்யமானவர்கள். அத்துடன், கனடியத் தமிழர் சமூகம் மேற்கொண்டு வருகின்ற பல்வேறு செயற்பணிகளிலும் தீவிரமாகப் பங்காற்றி வருபவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...் தேர்தல் - 22 உறுப்பினர் தெரிவு
# ...n Tamils - 22 Members Elected


...பரம்சோதி
21,617


தர்சிகா செல்வசிவம்
11,568


சாகரி செந்தில்குமார்
11,503


கிருஸ்ணா சரவணமுத்து
24,704


சிவா விமலச்சந்திரன்
23,774


அசோக் நித்தியானந்தன்
23,044


செல்லத்துரை
தெய்வேந்திரம்
1493


தோமஸ்
செபஸ்ரியாம்பிள்ளை
1493


சுபிதா தர்மகுலசேகரம்
1505


மயூரன் மனோகரன்
1494


சுரேகா செல்வரட்ணம்

கீழ் வரிசை ஒளிப்படங்கள் மாகாணப் பட்டியல் பிரதிநிதிகள்

தேசிய அவையில் பொது இடங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஐந்து பிரதிநிதிகளாக கவிதா செந்தில்முருகன் (25,016), மோகன் ராமகிருஷ்ணன் (24ம885), நீதன் சண் (24,338), ராஜ் சுப்பிரமணியம் (23,770), திவா பரஞ்சோதி (21,617) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

ஒன்ராறியோ மாகாண உறுப்பினர்களாக பொதுப்பட்டியலில் நல்லையா பிரபா (22,900), சபாபதி தேவா (22,353), மாணிக்கம் மகேந்திரன் (21,294) ஆகியோரும், பெண் உறுப்பினர்களாக நந்தினி விஜயபவன் (10,204), லக்ஷி சிறிதரன் (10,132) ஆகியோரும், இளையோர் உறுப்பினர்களாக நான்சி கமலநாதன் (23,358), அசோக் நித்தியானந்தன் (23,044) ஆகியோரும் தெரிவாகினர்.

கியுபெக் - கிழக்குக் கனடா மாகாண உறுப்பினர்களாக தெய்வேந்திரம் செல்வத்துரை, தோமஸ் செபஸ்தியாம்பள்ளை, சுபிதா தர்மசேகரம், மயூரன் மனோகரன் ஆகியோரும், மேற்குக் கனடா உறுப்பினர்களாக சுரேகா செல்வரட்ணம், செல்வன் செல்லத்துரை ஆகியோரும் போட்டியின்றித் தெரிவாகினர்.


றொறன்ரோ கிழக்கின் பிராந்திய சபைக்கான தேர்தலில் வெற்றி பெற்றோர் விபரம்: முத்துலிங்கம் கோபி (7,672), குமார் ஞானசேகரம் (7,651), வரதன் சோமசுந்தரம் (7,645), குகன் இராசலிங்கம் (7,622), சாந்தி தேவராஜா (7,509), றொபர்ட் ஞானபிரகாசம் (7,375), விக்கி சீவரட்ணம் (4,559).

மூன்று பிராந்திய அவைகளுக்கு போட்டியின்றித் தெரிவானோர் விபரம்: றொறன்ரோ மேற்கு பிராந்தியம்: கணபதிப்பிள்ளை சௌந்தரராஜா, சுப்பிரமணியம் பாலசிங்கம், வேலுச்சாமி செந்தில்குமார். பீல் பிராந்தியம்: அல்வன் டேமிசன், கேதீஸ்வரன் கான், மரியநாயகம் ஜேன்ஸ், நடராஜா பவநீதன், சண்முகம் கோகிலதாஸ். யோர்க் பிராந்தியம்: ஜெயரட்ணம் பற்றிக், கிருஷ்ணராஜா தவம், பேரம்பலம் மெய்யழகன், பொன்னுத்துரை திரு, ராம் ரூபன், சிவகுமாரன் சாந்தினி, தேவராஜன் ரங்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ், சமய, நடன, மிருதங்க, இசை தொடர்பான புறோமாரின் சொந்தத் தயாரிப்புகள் யூன் 6ம் திகதிமுதல் விற்பனைக்கு வருவதால் அவற்றின் கொள்வனவாளர்கள் இந்த விளம்பரத்துடன்மேலதிக விலைக் கழிவையும் பெற்றுக்கொள்ளலாம்**

*உங்களுக்குத் தெரியும், நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..*



**2010முதல் அதிகமான பொருட்கள் எங்களின் சொந்த தயாரிப்பு என்பதால் இந்த பொருட்களோ, விலையோ வேறு எங்கும் கிடைக்காது.**

*On high, with your thoughts*

**PROMAR**
**Awards & Promotions Ltd**

**www.promarawards.com 416-291 2344**

*585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5*

# AB LEGAL SERVICES
## Professional Corporation

### Kauvsegan.E
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200 Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# கால் பந்தாட்டம்
## உலகக் கிண்ணம் - 2010

விளையாட்டை விளையாட்டாக மட்டுமே பார்த்த காலம் இப்போது மலையேறி விட்டது. தேச பக்தியை வெளிப்படுத்தும் இடம், விளையாட்டரங்கமே என்று விளையாட்டு வீரர்களும் ரசிகர்களும் கருதும் காலமிது.

நன்றாக விளையாடினாலோ, அதிகளவில் கோல்கள் போட்டாலோ நிறையப் பணம் கிடைக்கும், விளம்பரத் திரைகளில் நடித்து புகழும் பணமும் பெறலாம், பிரசித்திபெற்ற கால் பந்து அணிக்கு மாறிக்கொள்ள இது வாய்ப்பாக இருக்கும் என்றெல்லாம் வீரர்கள் கருதுவதால் 19வது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் (2010) விறுவிறுப்புக்குப் பஞ்சம் இருக்கவில்லை என்றே கூறவேண்டும்.

ஜூன் 25ஆம் திகதி வரை நடைபெற்ற உலக கிண்ண போட்டிகளில் குறிப்பிடத்தக்க பல சிறப்பம்சங்கள் இடம்பெற்றன. முதன் முறையாக இப்போட்டி ஆபிரிக்க மண்ணில் நடைபெற்றது, முதலாவது சிறப்பு. ஆறு ஆபிரிக்க நாடுகள் இதில் பங்கேற்கின்றன. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, 32 நாடுகள் எட்டுப் பிரிவுகளாக கலந்துகொண்ட முதற் சுற்றுப் போட்டகளின் 'றவுன்ட்' - 16க்குத் தெரிவாவதற்கு முன்னர் எந்த அணி ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்று தெரிவாகும் என்பது ஒவ்வொரு பிரிவின் இறுதியாட்டம் வரையும் கேள்விக்குரிய விடயமாகவே இருந்தது. இது, இவ்வருட போட்டியின் மிகப்பெரும் சிறப்பம்சம்!

1990ல் இத்தாலியின் கெமருன் அணியும், 2002ல் தென்கொரியாவில் செனகல் ஆகிய ஆபிரிக்க அணிகள் மட்டுமே இதுவிரை கால் இறுதிக்குத் தெரிவு பெற்றன. இதுவரை எந்த ஆபிரிக்க அணியும் அரையிறுதிக்கு முன்னேறவில்லை. ஆனால், இம்முறை இளம் வீரர்களை உள்ளடக்கிய கானா அணி முன்னேறுமா என்பது கேள்விக்குரியது.

உலகக்கிண்ண மேலும் சில சுவையான விடயங்களைக் கவனிப்போம்:

* விதியை மீறும் வீரருக்கு சிவப்பு அட்டை (வெளியேற்றுதல்), மஞ்சள் அட்டை (எச்சரிக்கை) கொடீக்கும் முறையைக் கொண்டு வந்தவர் நடுவர் குழுத் தலைவராகவிருந்த கென் அஸ்டன். வாகனப் பயணத்தின் போது வீதிகளிலுள்ள 'சிக்னல்' வெளிச்சத்தைப் பார்த்தே 1970 நிற அட்டை காட்டும் சிந்தனை இவருக்கு வந்ததாம்.

* உலகக் கிண்ண போட்டிகளில் அதிக ஆட்டங்களில் பங்கு பற்றியவர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த லோத்தர் மத்தியுஸ். 1982 முதல் 1988 வரை 25 போட்டிகளில் இவர் ஆடியுள்ளார்.

* உலகக் கிண்ணத்தை வென்ற அணியின் தலைவராகவும் (1974), பின்னர் பயிற்சியாளராகவும் (1990) உலகக் கிண்ண போட்டியில் பங்குபற்றியவர் ஜேர்மனிய வீரரான பிரான் பேக்கன் மட்டுமே.

* அதிகுறைந்த வயதான 17ல் உலக கிண்ணப் போட்டியில் பங்குபற்றியவர்கள் பிலெ (பிரான்ஸ்), நோமன் வைற் (வடஅயர்லாந்து) ஆகியோரே.

* அதிகூடிய வயதில் பங்குபற்றிய கமருன் அணியைச் சேர்ந்த ரோஜர் மில்லர, 1994ல் ரயோவுக்கு எதிராக விளையாடி கோல் போட்டபோயு வயது 42.

* அதிக கோல்களைப் போட்டவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜஸ்ட்போன் டயன். 1958ல் 13 கோல்களைப் போட்டார்.

* ஒரு போட்டியில் அதிக கோல்களைப் போட்ட அணி ஹங்கேரி. 1982ல் எல்சல்வடோருக்கு எதிராக 10-1 போட்டு அபார வெற்றி பெற்றது.

* உலகக் கிண்ண போட்டியில் அதிக கோல்களைப் போட்ட ஜேர்மனியின் முல்வரின் (14) சாதனையை, பிறேசில் வீரர் றொனால்டோ (25 கோல்கள்) முறியடித்துள்ளார்.

ஒரு தடவை உலகக் கிண்ணத்தை வென்று, இரு தடவை இறுதியாட்டத்துக்குச் சென்ற பிரான்ஸ் இம்முறை இரண்டாவது சுற்றுக்கே தகுதி பெறாது போனது.

2006ல் சாம்பியனாக வந்த இத்தாலி, முன்னர் நான்கு தடவை உலக கிண்ணத்தை


(28ஆம் பக்கம் வருக)


இது உங்களுக்கு...!




வீடு வாங்கும் போதோ அல்லது விற்கும் போதோ
இந்த சன்மானம் உங்களுக்கு உறுதியாகிறது!
(நேரடியாக தொடர்பு கொள்பவர்களுக்கு மாத்திரமே)

HomeLife/ Future Realty Inc.
Realtor Member
262 Markham Road
Scarborough, ON M1J 3C5






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

NIMAL VINAYAGAMOORTHY


Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2


## கவர்ச்சிமிகு கணினிப் பெண் ஐ-பாட்..

இப்படி அனைத்தையும் இணைத்து, இன்னும் அதிகரித்த சிறந்த இலத்திரனியல் சேவைகளையும் உள்ளடக்கி, வெறும் 499 டாலர்களுக்கு சந்தைப்படுத்தியது அப்பிள் நிறுவனம். இது போன்ற கருவியைத் தயாரிப்பதற்கு கூகிள் முடக்கிய மூலதனம் அனைத்தும் இப்போது கேள்விக் குறியாகியிருக்கிறது. இதற்கிடையில், பல்வேறு புதிய புதிய இலத்திரனியல் சாதனங்களும் போட்டி போட்டுக்கொண்டு வேகவேகமாக முளைப்பதால், இவற்றை உற்பத்தி செய்வதற்கு ஒப்பந்தத்தைப் பெறுகின்ற ஆசிய நாடுகளில், தொழிலாளர்கள் வேலையை இழப்பது அதிகரித்து வருகிறதாகவும், குறிப்பாக சீனாவில் ஐஃபோன், ஐபொட், ஐபாட் உற்பத்தி மந்தநிலை காரணமாக, ஏராளமான சீனர்கள் தற்கொலை செய்துகொண்ட விபரங்களும் கணினியுலகை அச்சமூட்டுகின்றன.

இருந்தும், கணினியுலகம் படு வேகத்தில் வளர்ச்சி காண்பது, உலகளாவிய ரீதியில் இளையவர் உலகைப் புளகாங்கிதமடைய வைத்திருப்பது உண்மை. பல நாட்கள் கொட்டகை போட்டு வீதியிலே தங்கியிருந்து, முதலாவது நாளில் ஐபாட் வாங்கிய பல ஆயிரம் வாடிக்கையாளர்களின் ஆர்வத்தைப் பார்க்கும்போது, இலத்திரனியல் உலகின் விந்தைகள் அனைத்தும் மக்களை வியக்க வைப்பதுடன் வெகுவாகக் கவரவும் வைக்கின்றன என்பதில் ஐயமில்லை.




பா(f)ன்ஸி *Fancy Florist* பூக்கடை



கனடாவின் முதன்மையான, முன்னணி நிறுவனம்.

திருமண மண்டப அலங்காரம், மணமாலைகள்,
வாழையிலை, மாவிலை, தோரணம்
இறுதிச் சடங்கு மாலைகள் மற்றும் பூக்கள்







தொடர்புகளுக்கு வரதன்

1688, Victoria Park Ave., North York, ON

**416 288 1419**

இணையத்தளம்: www.fancyflorist.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவாஜினி பாலராஜன்

# பெண்ணின் பொழுது

25

## நகைசெய்யும் கலை (தொடர்ச்சி)



### Clasps
இவை நகையின் இரு முனைகளை இணைப்பதற்குப் பாவிக்கப்படும். உதாரணமாக கைச்சங்கிலி, கழுத்துக்கு அணியும் சங்கிலி போன்றவை. இவை பல்வேறு விதமான வடிவங்களில் காணப்படுகின்றன. இருப்பினும் வாங்கும் போது சுலபமாக திறந்து மூடக் கூடியனவாக வாங்க வேண்டும்.

### Jump Rings
கம்பியினை வளைத்து இதனைச் செய்து கொள்ளலாம். அல்லது செய்தபடியே விற்பதனை வாங்கிக் பாவித்துக் கொள்ளலாம்.



### Crimp Beads
இவை சாதாரண உலோகத்தாலான சிறு மணிகள். இரண்டு முனைகளிலும் கொழுக்கிகளைப் பாவிக்கும் போது கம்பியையும் கொழுக்கியையும் இறுக்கமாக சேர்த்து வைப்பதற்கு இதனை பாவிக்கலாம். இதனை உள்ளே கொழுவி விட்டு குறட்டினால் மெதுவாக நசித்து இறுக்கி விடலாம். மேலும் சில சமயங்களில் இடையில் சில மணிகள் அசையாது நிறுத்தவும் பாவிக்கப்படும்.

### சங்கிலி
மாலை அல்லது கைச்சங்கிலியின் நீளத்தினைக் கூட்டுவதற்கு சங்கிலி பாவிக்கலாம். இச்சங்கிலி அடிக் கணக்கில் விற்கப்படுகின்றது. மேலும் இவை பல்வேறு விதமான வடிவங்களிலும் வெள்ளி, பொன்நிறம், செப்பு நிறம் போன்றவற்றிலும் காணப்படும். மணியினைக் கட்டும் இழை (Beads Stringing Wires) இது பல்வேறு நிறங்களிலும் விட்டத்திலும் கிடைக்கின்றது. உலோகமுமின்றி பிளாஸ்டிக்கும் அற்ற ஓர் விதமான பொருள்.

### மணிகள்
இவை சாதாரணமாக செயற்கையாகத் தயாரிக்கப்பட்டவை நிறையவே உண்டு. அத்துடன் கிறிஸ்டல் எனப்படும் ஒரு வித மணிகள் உண்டு. இவை சாதாரண மணிகளை விட விலை அதிகமாக இருப்பது மாத்திரமன்றி மிகவும் பிரகாசமாக அழகாக இருக்கும். பொதுவாக இம் மணிகள் பிளாஸ்டிக் பையில் வைத்து விற்பனை செய்யப்படும்,




### Bead board:
இந்த மட்டையானது வளைந்தது பீலி போன்ற அமைப்பினையும் கொண்டதாகை இருக்கும். மேலும் இதில் அளவுகளும் இருக்கும். என்ன நீளம் தேவை என்பதனை தீர்மானித்து அதற்கேற்ப அளவுகளை தீர்மானிக்க உதவும். மேலும் நிலத்தில் மணிகள் தவறிவிழாது பாதுகாப்பாக இருக்கவும் இது ஒரு சுலபமான உபகரணம்.

### இடுக்கி (Tweezers)
மிகவும் சிறிய மணிகள் அல்லது மேற்கூறிய பொருட்களை கையினால் எடுப்பது கடினம். நழுவி விடும். இவ்வாறான இடுக்கிகள் சுலபமாக எடுப்பதற்கு உதவும்.

தொடரும்

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
S.P. Importers



Fresh Fish & Meat
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

Furniture & Mattress
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

Grocery & Vegetables
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

Video & Audio
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario. MIK 5J8**
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

**Dr. Shan - Thursday (morning)**
**Dr. Yao San (Tue, Fri & Sat**
**Dr. Brian (monday)**
**Dr. May (wednesday)**

**(416) 690 0121**



# Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
www.computek.edu

*If you are :*

- Currently receving E.I benefits
- Received E.I within past 3 yrs.
- Just finished / received maternity benefits within past 5 yrs

*You may be eligible for HRSDC funding*
*to upgrade your skills*

**NEW LOCATION**
IN
**MARKHAM !**

**Diploma**

Early Childcare Assistant
Network Engineering
Personal Support Worker (PSW )
Computerized Accounting
Business Administration
Medical Office Admin (MOA)

Certificate

MS Office, A+, C/C++ , Java
AccPac, Quick Books
Simply Accounting

**Markham Campus**
Markham / Steeles
(On Steeles,1 Block East of Markham Rd)
**905.471.3344**

**Scaborough Campus**
Kennedy / Sheppard
(North-East Corner)
**416-321-9911**


**Toronto Campus**
Kennedy / Eglinton
N/W Corner, Above Library
**426.285.9941**

PLEASE NOTE THAT NOT ALL THE COURSES ARE AVAILABLE AT ALL THE CAMPUSES.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபுதாபிக் கட்டிடம் பைசா கோபுரத்தை முறியடித்துள்ளது



உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் இத்தாலிய நாட்டின் பைசா என்ற சாய்ந்த கோபுரத்தை முறியடித்துள்ளது அபுதாபியின் நவீன கட்டிடம். அதிகளவில் சாய்ந்திருக்கும் சாதனையில் இத்தாலியின் பைசா கோபுரத்தை அபுதாபியின் கேற் கப்பிற்றல் (Gate-Capital) முறியடித்து கின்னஸ் சாதனையில் இடம்பெற்றுள்ளது.

இத்தாலியில் உள்ள உலகப் புகழ்பெற்ற பைசா கோபுரம் 4 பாகை சாய்ந்துள்ளது. அதைப் பின்னுக்குத் தள்ளி கேற் கப்பிற்றல் முதலிடம் பிடித்துள்ளது. பைசா கோபுரத்தை விட நான்கு மடங்கு அதிகமாக 18 பாகை கோணத்தில் இது சாய்வாகக் கட்டப்பட்டுள்ளது.

அபுதாபி தேசிய கண்காட்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்தக் கட்டடம் கட்டிய பின்னர் சரியவில்லை; சரிந்தததாகவே கட்டப்பட்டது. 160 மீட்டர் உயரம் கொண்ட இதில், ஐந்து நட்சத்திர விடுதியும் அமையப் போகிறது.



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

## மனமே! நலமா?

5

"ஒருவரின் செயற்பாடுகளிலிருந்து அவரது மனநிலையின் உளப்பாங்கனைப் புரிந்து கொள்வது அறிவாளியின் முக்கிய கடமை" என்ற அடிப்பிடையைக் கூறியவர் ஜோர்ஜ் ஓர்வெல் (George Orwell) என்ற அறிஞராவர். பொதுவாக உடலின் வெளிபபுற வெளிப்பாடுகளான காய்ச்சல், தலையிடி, இருமல் போன்றவற்றிற்காக உடனே மருத்துவரிடம் செல்லும் எவரும் பயம், பதற்றம், உளச்சோர்வு போன்றவற்றால் அவதியுறும்போது செல்வதில்லை. காரணம், மேற்படி நோய்களைப் புரிய வைப்பதும், புரிந்து கொள்வதும் மிகக் கடினம் என்பதாகும்.

மனநலக் குறைபாடுகளால் நாம் துன்புறும்போது எமது உள்ளார்ந்த அனுபவத்திற்கு வார்த்தை வடிவம் கொடுப்பதும், உண்மையை எடுத்துக் கூறுவதும் கடினமாகிறது. இதனாற்தான் மன நோயாளிகள் அதிகரித்து வருகிறார்கள்.

உடல்நலம் என்பது ஒருவரது நோயற்ற நிலையாகும். முழுமையான நல மேம்பாடு (well being) அல்லது தடையில்லாத முழுவளர்ச்சி என்ற வகையில் ஒரு புதிய பார்வையை இன்றைய சமூகம் வேண்டி நிற்கின்றது. இன்னொரு வகையில் ஒருவரது அனைத்து இயல்புகளுக்கும் சமமான முக்கியத்துவம் தர வேண்டியது இன்றைய தேவையாகும்.

ஒரு நாளில் அல்லது சில நாட்களில் மாற்ற முடியாத பல்வேறு மனவியாதிகள் உள்ளன. உளவழி நரம்பு நோய்கள் (Neuroses), உளவழி உடல் நோய்கள் (pshcho-somatic disorders) என்பவற்றினால் துன்புறுவோர் ஏராளம். அத்துடன், மனஎழுச்சிக் குறைபாடுகள் (emotional disorders) காரணமாகத் துன்புறுவோரும் உள்ளனர். சிறிய பிரச்சனைகள் என்று கவனிக்காது விடுவதால் வாழ்வு முழுவதுமே துன்பத்தை அனுபவிக்க நேரிடுகிறது.

மனநலக் குறைபாடுகள் பல வகையான கலாசாரப் பின்னணிகளில் ஏற்பட்டாலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் இவற்றுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை பின்தங்கிய நாடுகள் கொடுப்பதில்லை. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் ஒரு இலட்சம் பேருக்கு ஒரு மனநல வைத்தியர் உள்ளபோது இந்தியாவில் எட்டு இலட்சம் பேருக்குத்தான் ஒரு வைத்தியர் உள்ளார். மக்களின் கல்வித்தரம், சிந்தனா சக்தி, அவதானிப்பு என்பதைப் பொறுத்தே இது அமைகிறது.

கீழைத்தேச நாடுகளில் மந்திர மாயாஜாலங்கள், மை போட்டுப் பார்த்தல், சூனியச் செய்கைகள் மூலமே மனநோய்களைத் தீர்க்க முயற்சிக்கின்றனர். தனியான அறைகளில் நோயாளிகளை அடைத்து வைத்து, மந்திரவாதிகள் இவர்களை விலங்குகள் போல நடத்தி வருவதை அவதானிக்க முடிகின்றது.

அறிவுபூர்வமாகச் சிந்திக்கத் தெரிந்த சமூகமாக நாம் மாற வேண்டிய அடிப்படைத் தேவையில் உள்ளோம். மனநலக் குறைபாடு உள்ளவர்களை வேடிக்கை, வினோதமாகப் பார்ப்பதை விடுத்து அனுதாபத்துடனும், பச்சாதபத்துடனும் அணுகி அவர்களைக் காக்க நாம் முன்வர வேண்டும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE Education Funds

**RESP SAVINGS PLAN**

**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM


**INCOME TAX PREPARATION**

**Personal Income Tax**

**Small Business Income Tax**

**Computerized Returns**

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com

## புலம் பெயர்ந்தோர்

(14 ஆம் பக்கத் தொடர்)

இந்தச் சந்தர்ப்பத்தில் பல சடுதியான மாற்றங்கள் அந்த தாவரத்திற்கு ஏற்படுவதனை நாம் விளங்கிக் கொள்ளலாம். இங்கு எமது கருப்பொருளாக புலம் பெயர் மாந்தர்கள், தமது சுய நிலத்தில் இருந்து பிடுங்கப்பட்டு, மிகவும் அந்நிய சூழலில் பதிவைக்கப்படுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பற்றி அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யப்படும் துறையே புலம் பெயர்ந்தோர் உளவியல் எனலாம். உளவியல் என்றால் ஒரு தனி மனிதனின் மனத்தில், உள்ளத்தில் ஏற்படும் பரிவர்த்தனைகள் (Process) ஆகும். இப்பரிவர்த்தனையை சுருக்கமாக பின்வரும் மாதிரி ஊடாக விளங்கிக் கொள்ளலாம்.

சூழல்

| | |
|---|---|
| சுவை | வாய் |
| ஒளி | கண் |
| ஊறு | உடல் |
| ஓசை | செவி |
| நாற்றம் | மூக்கு |

திருவள்ளுவர் இதனை மிகவும் அழகான குறளாகச் சுருக்கி விபரிப்பதனை பார்க்கலாம்:
"சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென்றைந்தின்
வகை தெரிவான்கட்டே உலகு"
ஐம்புலனாகிய சுவையை உணரும் நாக்கு, ஒளியை உணரும் கண்கள், ஊறு, ---- உணர்விற்கு பொறுப்பான முழு மெய் (உடல்), ஓசைக்குப் பொறுப்பான செவிகள், நாற்ற (மண)த்திற்குப் பொறுப்பான மூக்கு. இவற்றிற்கு ஊடாக நாம் சூழலை உள்வாங்குகின்றோம். ஐம்புலன்கள் ஊடாக ஐவகைத் தரவுகள் எமது மூளையை வந்தடைகிறது. வந்தடைந்த மாத்திரத்திலேயே நாம் சூழலிற்கு துலங்க (தக) அமைய தயாராவி விடுகின்றோம்.

இந்த இடத்தில் தனி மனிதனும், விலங்கினங்களும் ஒரே மாதிரியான துலங்கல் பண்புகளைக் கொண்டுள்ளோம். ஊதாரணம்: எதிரி விலங்கின் வாசனையோ, சத்தத்தையோ, காட்சியையோ உள்வாங்கிய மூளை, சடுதியாக அந்த உடலை பாதுகாப்பான இடத்திற்கோ, பதுங்கு இடத்திற்கோ மின்னல் வேகத்தில் இட்டுச் செல்கிறது. இதற்குப் பொறுப்பான செயல்பாட்டின் அனிச்சை துலங்கல் (Reflexive response) எனலாம்.

வள்ளுவர் தனி மனிதனை "சான்றோன்" ஆக்குவது பற்றிய கொள்கை உடையவர். ஆகவே அவர் அனிச்சை துலங்கல் நிலையிலிருந்து மேற்படி சென்று, மனிதன் மனிதத் தன்மையுடன் வாழ்ந்து, சான்றோன் ஆக வேண்டுமென்றால் "ஐந்தின் வகை தெரிவான்கட்டே உலகு" என்கிறார். நவீன விஞ்ஞான உளவியல் கூட இதனையே "நல் மக்கள் சமூக, நாட்டு அடிப்படைப் பண்பாக" வரித்து கூறுகின்றது. அதாவது ஐம்புலன்களால் வருகின்ற தரவுகளுக்கு சிந்தனை, பகுத்தறிவு பங்காற்றல் இல்லாது இயங்கக் கூடாது. மிகவும் ஆபத்தானது. அவ்வித அனிச்சை நடத்தை துலங்குதல் அந்த மனிதனையே நலம் கெட்டவனாக ஆக்கி கருக்கிவிடும் என எச்சரிக்கை செய்கின்றது.

இந்த அடிப்படை சிந்தனையிலேயே மேற்கு நாட்டு சமூக சலாசாரங்கள் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். இத்தகைய கலாச்சாரத்தில் A - Z விடயங்கள் சமூகத்தில் இயங்குவதற்கு அரசினால் அனுமதிப் பத்திரம் (License) கொடுக்கப்பட்டிருக்கிறது. தனி மனிதன் அனிச்சை நடத்தை உடையவனாக இருந்தால் விட்டில் பூச்சி விளக்கை நாடிச் சென்று தன்னையே அழிப்பதற்கு ஒப்பானதாகும். இதனைத் தடுப்பதோ, விலக்குவதோ, சுதாகரிப்பதோ ஒவ்வொரு தனி மனிதனின் உரிமை, சுதந்திரம், கடமை என்கிறது தாராளவாத சிந்தனைச் சமூகம். அதற்குத்தக பாடசாலை கல்விகளைக் கூட செப்பனிட்டு வைத்திருக்கிறது. ஆனால் இந்தத் தெளிவு, தெளிவிற்கான செய்தித் தகவல்கள் எமது முதலாம் சந்ததியிடம் அருகி இருப்பதன் விளைவே மூர்த்தி - மஞ்சு தம்பதிகளின் எடுத்துக் காட்டு.

மீண்டும் எம் விடயத்திற்கு வருவோம். உளவியல் என்பது வெறும் அகத்தில், மனதில் நடக்கும் செய்திப் பரிவர்த்தனை மாத்திரமல்ல. சூழலிற்கும், தனி மனிதனிற்கும் நடக்கும் புற நிலை தக அமைவு செயல்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

(அடுத்த இதழிலும் வரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# என்றுமுள்ள செந்தமிழ்

37

**வடமொழியே தமிழ்மொழிக்குத் தாய் என்ற மாயையை உடைத்தெறிந்த கால்டுவெல் அய்யர்!**

இந்தத் தொடரை நீங்கள் படிக்கும் போது கோவையில் யூன் 23 - 27 நாள்களில் நடைபெறும் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடந்து முடிந் திருக்கும். பல கோடி செலவில் தமிழக அரசால் நடத்தப்படும் இந்த விழாவில் 300 க்கும் கூடுதலான தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்கிறார்கள். அரசியல் மட்டத்தில் இந்த மாநாட்டுக்குப் பலத்த எதிர்ப்பு இருந்தாலும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இந்த மாநாடு ஓரளவாவது பயன்படும் என்ற எண்ணம் உண்டு.

உலகமொழிகளில் கிரேக்கம் இலத்தீன் இரண்டும் செம்மொழிகள் என்று கருதப்பட்டன. கி.பி. 1800 னி 1900 அளவில் வில்லியம் ஜோன்ஸ், மாக்சு முல்லர் போன்ற அறிஞர் பெருமக்கள் வடமொழியின் தொன்மை நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டனர். அதன் விளைவாக வடமொழியும் செம்மொழியாகக் கருதப்பட்டது. 1816 இல் எல்லிஸ் என்ற அறிஞர் தென்னிந்திய மொழிகள் வடமொழியல்லாத மொழிக் குடும்பத் தைச் சார்ந்தவை என நிறுவினார்.

கால்டுவெல் அய்யர் ஸ்கொட்லாந்து நாட்டில் பிறந்து (1814 - 1892) கிறித்துவ மதத்தைப் பரப்ப தமிழகத்திற்கு 1838 இல் வந்தார். திருநெல்வேலியில் 50 ஆண்டுக்காலம் தங்கிக் கிறித்துவச் சமயப்பணி ஆற்றினார். அவர் தமிழ் மொழியை வட மொழியுடனும் தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற திராவிட மொழிகளுடனும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்தார். அவருடைய ஆய்வு அது வரை இருந்த மொழியியல் நம்பிக்கை களை உடைத்தெறிந்தது.

"வடமொழியே பிறமொழிகளுக்குத் தாய், அதிலிருந்தே மற்றமொழிகள் தோன்றின, அது தேவமொழி" என்னும் கருத்துக் களும் நம்பிக்கைகளும் வலிமையாகவும் பரவலாகவும் பரப்பப்பட்டிருந்தன. தமிழ் மொழி வடமொழியின் துணையில்லாமல் இயங்க இயலாது என்ற நம்பிக்கை வடமொழிப் பண்டிதர்களிடம் வேர் ஊன்றியிருந்தது. கால்டுவெல் அய்யரின் ஆராய்ச்சி வேறு உண்மைகளைக் கூறியது. 1856 இல் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் (The Comparative Grammar of the Dravidian Languages) என்ற அரிய நூலை எழுதி வெளியிட்டார்.

திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் வெளி வந்த பின்னரே தமிழ்மொழி வடமொழிக் குடும்பத்திலிருந்து வேறுபட்டது. அது, திராவிட மொழிக் குடும்பத்தின் தாய்மொழி, அதிலிருந்தே தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பல மொழிகள் தோன்றின. தமிழ் வடமொழியின் துணையில்லாமல் தனித்தி யங்கும் தன்மை வாய்ந்தது என்றும் தமிழ், வடமொழியின் கலப்பை எந்த அளவுக்கு நீக்குகிறதோ அந்த அளவுக்குத் தூய்மை அடைந்து சிறந்து விளங்கும்" என்றும் அவர் எண்பித்தார். மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை (1855 - 1897) அத்தகையதொரு மொழியியல் கருத்தைத் தாம் இயற்றிய மனோன்மணி யம் என்னும் நாடகநூலின் தமிழ்த்தெய்வ வணக்கப் பாடலில் பாடியிருந்தார்.

கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையாளமும் துளுவமும்
உன்உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல
ஆயிடினும்
ஆரியம்போல் உலகுவழக்கு
அழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே!

கன்னடம், களிதெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகள் தமிழ் என்னும் ஒரே வயிற்றில் தோன்றிய மொழிகள். வடமொழி உலக வழக்கில் அழிந்தொழிந்து போன மொழி, தமிழ் என்றும் இளமையோடு வாழும்மொழி என்பதே இதன் பொருளாகும். மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை திருவாங்கூர் பல்கலைக் கழகக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். தமிழை தெய்வத்தாய் என்று அழைத்த பெருமை இவரையே சாரும்.

பின்னர் பரிதிமாற்கலைஞர் (வி. கோ. சூரியநாராயண சாத்திரியார்) தாம் எழுதிய "தமிழ் மொழியின் வரலாறு" எனும் நூலில் தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என்ற கருத்தினை வலியுறுத்தினார். இவர்களைத் தொடர்ந்து தனித்தமிழ் இயக்கத்தினைத் தமிழ்க்கடல் மறைமலை அடிகள் தொடங்கினார். இவ்வியக்கத்தினைத் தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் போன்றோர் கட்டி வளர்த்தனர்.

தமிழின் தொன்மையையும் வளமையையும் வேர்ச்சொல்லாய்வின் வாயிலாக உலகறியச் செய்தவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ஆவார். தமிழ் முதல் செம்மொழி என்ற கருத்தினைப் பாவாணர் The Primary Classical Language of the World என்ற தம் நூலில் விளக்கியுள்ளார்.

அவர் எழுதிய இன்னொரு நூல் ஒப்பியல் மொழி நூல் என்பதாகும். அந்த நூலை எழுதுவதற்கு கால்டுவெல் அய்யரின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலே அடிப்படை என பாவாணரே பதிவு செய்துள்ளார். இதனால் கால்டுவெல் அய்யரின் அளப்பரிய தமிழ்த் தொண்டு எத்தகையது என்பதை அறிய முடியும்.

கால்டுவெல் அய்யர் காலத்திற்கு முன்பே, வடமொழியில் வல்ல தமிழறிஞர்கள் வடமொழியில் காணப்படாத தமிழ்மொழியின் தனி இயல்புகளைக் கண்டறிந்து கூறினர். இவர்களுள், கிபி 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதவச் சிவஞான முனிவர் குறிப்பிடத்தக்கவர். இவர் எழுதிய தொல்காப்பியப் பாயிரவிருத்தியில், "தமிழ்மொழி புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும் வினைக் குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல் இலக்கணங்களும் உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும் அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடு களும் குறிஞ்சி, வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா" என்று அறுதியிட்டுக் கூறினார்.

இருபத்தாறாயிரத்து முந்நூற்று அய்ம்பது அடிகளில் உருப்பெற்றுள்ள சங்க இலக்கியம், சிறந்த உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழை உயர்த்துகிறது. தமிழர் பண்பாட்டின் விளைவாக விளங்கும் இம்மொழி இந்தியத் திருநாட்டில் ஒப்பற்றது. தனித்தியங்கும் ஆற்றலையும், தமிழ்மணவாசனை கமழும் உயர்தரம் கொண்ட இலக்கியக் கொள்கையினையும் யாப்பியல், பாவியல், அணியியல் முதலிய இலக்கணங்களையும் பெற்று விளங்குவது.

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**34 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**
5310 Finch Ave. East, Unit 23
Scarborough, ON M1S 5E8

**416-412-3838**
**416-836-5825**


சங்கச் செய்யுள் என்பது மொழியியல், யாப்பியல், நடையியல் ஆகியவற்றின் முழுமைபெற்ற வெளிப்பாடாகத் திகழ்வது. தமிழர் பண்பாட்டின் நனி சிறந்த கூறாகத் திகழும் சங்கச் செய்யுள் பிற மொழியாளரால் படியெடுக்க முடியாத விழுமிய இலக்கிய வெளிப்பாடாக இருப்பதுடன், செப்பமும் முழுமையும் வாய்ந்த படைப்பாகவும் திகழ்கிறது. இவ்வகையில், சங்கச் செய்யுள் உண்மையில் செவ்வியல் இலக்கியமாகும்" எனத் தமிழறிஞர் கமில் சுவலபில் குறிப்பிடுகிறார்.

உலகப்புகழ்பெற்ற மொழிபெயர்ப்பாளர் ஏ.கே. இராமாநுசன் மேலே கூறப்பெற்ற கருத்தினை வழிமொழிவதுடன், இந்தியச் செம்மொழிகள் இரண்டினில் வடமொழி வழக்கில் இல்லை என்றும் தமிழ்மொழி தொன்றுதொட்டு வழங்கிவரும் சிறப்புக்குரியது என்றும் கூறியுள்ளார்.

பாணினியின் அட்டாத்தியாயி என்னும் வடமொழியின் மூல இலக்கண நூலுக்குப் பேருரை கண்ட காத்தியாயனர், பதஞ்சலி ஆகியோர் தமிழ் தொடர்பான தம் அறிவினைப் புலப்படுத்தியுள்ளனர். கிரேக்கம், ஈபுரு, சீனம், சப்பானியம், கொரியம், மலாய் உள்ளிட்ட உலக மொழிகளில் காணப்படும் பற்பல தமிழ்ச் சொற்களைத் துறைவல்ல அறிஞர் பெருமக்கள் ஆராய்ந்து வெளியிட்டுள்ளனர். மேலை, கீழை நாடுகளுடனும் தமிழ்மக்கள் கொண்டிருந்த பண்பாட்டு, வணிகத்தொடர்புகளை நாணயவியல், கல்வெட்டியல் மற்றும் இலக்கிய ஆதாரங்களுடன் ஆராய்ச்சி அறிஞர்கள் நிலைநாட்டியுள்ளனர்.

இடைக் காலத்தில் பிறமொழி மற்றும் பண்பாட்டினரின் படையெடுப்புக்களால் தமிழ் நலிந்த நிலையில் தாழ்வுற்றுக் கிடந்தது. அதிலிருந்து மீண்டு அதன் தொன்மையையும் தொடர்ச்சியையும், சிறப்பையும் தமிழர்கள் தாம் அறிந்தும் பிறரும் அறியக்கூடியவாறு நிலைநிறுத்தத் தொடங்கிய காலப்பகுதி தமிழ் மீட்சிக் காலம் ஆகும். இக்காலப் பகுதி கிபி 1856 முதல் தொடங்கியதாகக் கொள்ளலாம். ஏட்டில் செல்லரித்துப் போய்க்கிடந்த சங்க நூல்களை உ.வே. சாமிநாத அய்யர், ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம்பிள்ள போன்றோர் அச்சேற்றிப் பொதுமக்கள் மத்தியில் உலா வரச் செய்தனர். இவற்றால் தமிழின் தலையெழுத்து மாறத் தொடங்கியது. தமிழின் பெருமையும் தமிழரின் நாகரிகச் சிறப்பும் வெளியுலகத்துக்கு தெரியத் தொடங்கியது.

தமிழுக்கு இவ்வளவு சீரும் சிறப்பும் இருந்தும் தமிழ்ப் பெற்றோர்கள் தமிழ்மொழியைத் தங்கள் குழந்தைகளுக்குக் கற்பிக்கத் தயங்குவதையும் பிறமொழிகளின் மீது ஈர்ப்புடையவர்களாக இருப்பதையும் பார்க்கிறோம். தமிழைப் புலம்பெயர் நாடுகளில் பரப்பும் பொறுப்பை தமிழக அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். புலம்பெயர் நாடுகளுக்கு ஆசிரியர்களை அனுப்பியும் பாட நூல்களை வழங்கியும் தமிழ் கற்க வழிசெய்ய வேண்டும். புலம்பெயர் மாணவர்கள் தமிழ்நாட்டுக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தமிழைக் குறுகிய காலத்தில் எழுதப் படிக்க வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

செம்மொழி மாநாடு நடத்துவதோடு நின்றுவிடாது நடைமுறையில் தமிழ்மொழி வளர ஆவன செய்ய வேண்டும். (தொடரும்)

## கால் பந்தாட்டம்..

வென்றுள்ளது. ஆறு தடவைகள் இறுதியாட்டத்துக்கும் தெரிவானது. இம்முறை, முதற் சுற்றிலேயே பரிதாபகரமாக செலவக்கிய அணியினால் வெளியேற்றப்பட்டது ரசிகர்களை அதிர்ச்சியில் உறைய வைத்தது.

2008ஆம் ஆண்டில் யுரோ சாம்பியனாக வந்த ஸ்பெய்ன் இந்த முறை முதல் ஆட்டத்தில் சுவிஸிடம் தோல்வயடைந்தது. ஆனால், அடுத்த இரண்டு ஆட்டத்திலும் வென்றதன் மூலம் இரண்டாவது சுற்றுக்குத் தெரிவானது. இரண்டாவது சுற்றில் வரலாற்று நிகழ்வாக, ஜேர்மனி எதிர் இங்கிலாந்து, போர்த்துக்கல் எதிர் ஸ்பெய்ன் அணிகள் மோதி ரசிகர்களுக்கு விருந்தளித்தன. கடந்த 18 உலகக் கிண்ண போட்டிகளில், பிறேசில் 5 தடவைகளும், இத்தாலி 4 தடவைகளும், ஜேர்மன் 3 தடவையும், ஆர்ஜன்ரினா 2 தடவைகளும், பிரான்ஸ், இங்கிலாந்து என்பன தலா ஒரு தடவையும் வென்றுள்ளன. ஜேர்மனியும் பிரேசிலும் தலா 7 தடவைகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன.

19வது உலகக் கிண்ணத்தை வெல்லப்போவது யாரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரசித்தி விநாயகர் வருடாந்த மகோற்சவம்

ஸ்காபரோ சிறீ வரசித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இந்த மாதம் 11ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. மஞ்சத் திருவிழா 20ஆம் திகதியும், மாம்பழத் திருவிழா 22ஆம் திகதியும், சப்பரத் திருவிழா 23ஆம் திகதியும், தேரத் திருவிழா 24ஆம் திகதி சனிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இடம்பெறும். 26ஆம் திகதி பூங்காவன உற்சவமும், 27ஆம் திகதி வைரவர் மடையும் நடைபெறும்.

## இலக்கியத் தோட்ட விருது வைபவம்

கனடா தமிழ் இலக்கியத் தோட்ட வருடாந்த விருதும் இலக்கிய சிறப்பளிப்புகளும் சேர்ந்த வைபவம் இந்த மாதம் 17ஆம் திகதி பிற்பகல் வழமை போல் ரொறன்ரோ பல்கலைக் கழக மண்டபமொன்றில் நடைபெற வுள்ளது. அழைக்கப்படுபவர்கள் மட்டும் கலந்து கொள்ளும் வைபவம் இது.

## விற்றமின் 'டி' இன் மகத்துவம்

விற்றமின் டி என்புகளுக்கும் பற்களுக்கும் எவ்வளவு முக்கியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. ஆனால் அண்மைய ஆய்வுகளின்படி, சில புற்றுநோய்கள், இருதய நோய்கள், நீரிழிவு நோய் போன்ற நோய்களிலிருந்தும் எம்மைப் பாதுகாக்க உதவுவதாக தெரிய வந்துள்ளது.

சூரிய ஒளியிலிருந்தே பிரதானமாக விற்றமின் டி உடலினால் பெறப்படுகிறது. சில வகை உணவுகளிலிருந்தும் இதனைப் பெற்றுக் கொள்ளலாம். அவையாவன பால், மீன், முட்டை, கனடிய காளான்கள். ஆம் காளான்கள் மட்டுமே விற்றமின் டி இனைப் பெறக்கூடிய மரக்கறியாகும்.

தமிழர் தகவலை
தபாலில் பெற
416 920 9250



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்
## டாலர்

43

வெள்ளிப்பணத் தொடரில் இம்முறை நாம் தங்கம் (Gold) பற்றிப் பார்ப்போம். பொதுவாகவே இலங்கை தமிழ் மக்கள் தாயகத்தில் தங்கத்தினை நகையாக அணிந்தாலும் அதனை ஒரு முதலீடாகவும் கருதி சேமித்துவைத்து பண நெருக்கடிகள் வரும் போது அதனை அடைவுவைத்து தற்காலிகமான நிதி நெருக்கடிகளை தீர்த்து வருவது ஒரு வழமையான வாழ்க்கை முறையாக இருந்தது. இன்று நாம் கனடாவில் நகைகள் அணிவது தனிமனித விருப்புக்களை பூர்த்தி செய்வதற்கும் இன்னும் சிலர் தமது பொருளாதார அந்தஸ்தினை மற்றவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டவும்தான் கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றதே தவிர இதனை ஒரு சேமிப்பாகவோ அல்லது முதலீடாகவோ கருதுபவர்கள் மிகச்சிலராகவே காணப்படுகின்றார்கள்.

ஆனால் இன்று உலக சந்தையில் தங்கத்தின் விலைகள் அதிகரித்துபோகின்ற தன்மை இதனை ஒரு மிகச் சிறந்த முதலீடாக கருதமுடியும் என சில பொருளியியல் ஆய்வாளர்கள் தமது கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். இதற்கு இவர்கள் கூறும் காரணங்களில் முக்கியமானது தங்கத்தின் விலைகள் காலத்துக்கு காலம் உயர்ந்து வந்துள்ளது என்பதாகும்.

பின்வரும் பட்டியல் ஒரு அவுன்ஸ் (ounce) தங்கத்தின் சராசரி விலை அமெரிக்க டாலரில் எவ்வளவாக இருந்தது என்பதனைக் காட்டுகின்றது.

| வருடம் | சராசரிவிலை | வருடம் | சராசரிவிலை |
|---|---|---|---|
| 1901 | கூ18.98 | 2000 | கூ279.11 |
| 1925 | கூ20.64 | 2005 | கூ444.74 |
| 1950 | கூ34.72 | 2008 | கூ871.96 |
| 1975 | கூ160.86 | | |

இக்கட்டுரையை எழுதும் இன்று (Jun 18, 2010 at noon) இதன் விலை கூ1260.00 டொலராக காணப்பட்டது. இது 2012ம் ஆண்டில் கூ2000.00 டொலர்களுக்கு அதிகமாக இருக்கலாம் என எதிர்வு கூறுகின்றனர். எது எப்படியாக இருந்தாலும் தங்கத்தின் விலை எக்காலத்திலும் பின்நோக்கிச் செல்லப்போவதில்லை என்பது தெரிகின்றது. இது ஒரு உலோகப் பொருளாக இருந்தாலும். இது அரிதாக கிடைக்கும் ஒரு உலோகமாகவும் (metal) இதனை தோண்டி எடுப்பதற்கும் அதனை சுத்திகரிப்பதற்கு ஏற்படும் செலவீனங்களும் இதன் விலை ஏற்றத்துக்கான ஒரு காரணமாக கூறப்பட்டாலும் வேறுபல காரணிகளும் இருக்கத்தான செய்கின்றன.

இன்றைய உலகப் பொருளாதார சூழ்நிலையில் (economic climate) பொருளாதார செழிப்பும் (economic boom) பொருளாதார மந்தமும் (recession) ஒரு வட்டவடிவில் மாறிமாறி வந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் பொருளாதார மந்தம் எற்படப்போகின்றது என்கின்ற வேளையில் பங்குச்சந்தையிலும் (stock market) மற்றும் ஆபத்து கூடிய முதலீடுகளில் (சளைம ளைெநளவஅநவெ) தமது முதலீடுகளை வைத்திருப்பவர்கள் தங்கத்தின் பக்கம் திருப்பும் போக்கினை காணக் கூடியதாக உள்ளது.

இதுமாத்திரமல்ல ஒவ்வொரு நாட்டின் மத்திய வங்கிகளும் (central bank) தாம் அச்சடித்து வெளியிடும் பண நோட்டுக்களின் பெறுமதிக்கேற்ப தங்கத்தினை இருப்பாக (reserve) வைத்திருக்க வேண்டும். அல்லது வேறு நாட்டு நாணயத்தினை (foreign currency) இருப்பாக வைத்திருக்க வேண்டும், என்பது நடைமுறை. இந்த நிலையில் தங்கத்தின் இருப்பை சில நாடுகள் கூடிய வீதாசாரத்தில் வைத்திருக்கின்றன. இவ்வாறு வைத்திருக்கும் நாடுகளில் முதன்மை வகிக்கும் நாடுகளாக அமெரிக்கா 8133.50 தொன் தங்கக் கட்டிகளை தமது இருப்பாக வைத்திருக்கின்றது. அடுத்ததாக ஜேர்மனி 3407.6 தொன்களையும், பிரான்ஸ் 2435.4 தொன்களையும் தமது இருப்பாக வைத்திருக்கின்றன. இந்த தரவுகள் 2009ம் ஆண்டு மார்கழி மாத தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. எனவே மேலே சொல்லப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பவுண் (Gold) இன் முக்கியதுவத்தினை வாசகர்கள் புரிந்திருப்பார்கள் என எதிர்ப்பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய மீளுருவாக்க விண்ணோடம்

## அறிவியல்

இயற்கையின் படைப்புக்களின் அதிசய பல அம்சங்கள் இன்னமும் மனித மூளைக்கு எட்டாது இப்பிரபஞ்சமெங்கும் பரந்து காணப்படுகின்றன. மனித அறிவுக்கு எட்டிவிட்ட பல விடயங்களை செயற்கையாக உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் முனைப்புடன் ஈடுபடுகின்றார்கள். அவ்வாறானதொரு முயற்சியே இந்த சுய மீளுருவாக்க விண்ணோடம் ஆகும்.

மனித மற்றும் பிற உயிரினங்களின் உடலில் காயம் ஏற்படும்போது, உடலில் காணப்படும் மீளுருவாக்கச் செயற்பாட்டின் காரணமாக காயத்தின் காரணமாகச் சேதமடைந்த பகுதி வளர்ச்சியுற்றுப் பழைய நிலையை அடைகின்றது. இவ்வாறு, விமானம் மற்றும் விண்ணோடங்களின் உடற்பகுதியில் சேதம் ஏற்படும்போது சேதம் ஏற்பட்ட பகுதியை அவ்விண்ணோடமோ அல்லது விமானமோ சுயமாகவே சரிசெய்யத்தக்கதாக அமைக்கும் முயற்சியை விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர். இதற்கென சிறப்பான மூலப்பொருட்களை உருவாக்குவதற்கான ஆய்வுகள் பல மேற்கொள்ளப்படுகின்றன.




விண்வெளிப் பயணங்களைப் பொறுத்தளவில், அவை மிகவும் ஆபத்து நிறைந்தவையாகவே காணப்படுகின்றன. விண்ணோடம் ஒன்றில் ஏற்படும் சிறு மயிரிழை அளவான வெடிப்பே மிகப்பெரும் விபத்துக்குக் காரணமாகிவிடலாம். இதன்காரணமாக, ஒவ்வொரு விண்வெளிப் பயணத்தின்போதும், விண்ணோடங்களுக்கான பாதுகாப்புச் செயற்பாடுகள் மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், தற்போது பயன்படுத்தப்பட்டுவரும் விண்ணோடங்களில் மிகநீண்ட பயணங்களைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதென்பது மிகவும் ஆபத்து நிறைந்ததாகவே காணப்படுகின்றது. இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வாகவே விஞ்ஞானிகள் இம்முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

பாரிய சேதங்களின் தொடக்கம் எப்பொழுதுமே கண்களுக்குப் புலப்படாத சிறு வெடிப்புகளாகவே காணப்படுகின்றது. இவ்வாறான வெடிப்புகள் குறித்த பகுதியின் மேற்பரப்பில் ஏற்படாது, அப்பகுதியின் உட்புறத்திலும் ஏற்படலாம். இவ்வாறான சிறிய வெடிப்புகள் ஏற்படும்போது, குறித்த அப்பகுதியின் திடத்தன்மை குறைவடைந்து வெடிப்பு மேலும் பெரியதாகி இறுதியில் முற்றாக உடைந்து விடுகின்றது. எனவே, ஆரம்பநிலை வெடிப்புகளைத் துல்லியமாகக் கண்டறிந்து அவற்றை சரியான முறையின் அடைத்துவிட்டால், மேலதிக சேதம் தவிர்க்கப்படும். இந்த இலக்கைக் குறிவைத்தே விஞ்ஞானிகளின் ஆய்வுகள் இடம்பெறுகின்றன.

இதற்கென சிறப்பான மீளுருவாக்கும் தன்மையுடன் கூடிய மூலப்பொருட்களை உருவாக்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த சிறப்பான மூலப்பொருட்கள் வெடிப்புகள் ஏற்படும்போது அவற்றை நிரப்பி ஒட்டவைப்பதற்குத் தேவையான பதார்த்தங்களையும் தன்னகத்தே கொண்டு உருவாக்கப்படும். healing agent என்றழைக்கப்படும் இப் பதார்த்தம், வெடிப்பு ஏற்படும்போது வெடிப்பினுள் கசிந்து வெடிப்பின் இரு ஓரங்களையும் ஒட்டிக்கொள்வதுடன் வெடிப்பின் அளவு அதி-கரிக்காது தடுக்கின்றது. இவ்வாறு ஓட்டப்படும் பகுதி குறித்த மூலப்பொருளின் உறுதித்தன்மையின் 75 வீதமான உறுதித்தன்மையினை வழங்குகின்றது.

இதேபோன்று, அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனம்,




விண்ணோடங்களின் கணினி மற்றும் இலத்திரனியல் கட்டுப்பாட்டுத் தொகுதிகளை சுயமாகக் கண்காணித்து அவற்றில் ஏற்படும் தவறுகளைத் தன்னியக்கமாகச் சரிசெய்யவல்ல, சுயமாகத் திருத்தம் செய்யும் தொகுதி (self-repairing system) ஒன்றினை உருவாக்கும் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆய்வுப்பணியில் நாசாவின் பறப்பு மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பைச் (NASA Aviation Safety Program) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தொகுதியினை முதலில் விமானங்களில் பயன்படுத்தி பின்னர் விண்ணோடங்களில் பயன்படுத்துவதே அவர்களின் திட்டமாக உள்ளது.

இந்தக் கண்காணிப்புத் தொகுதி, கணினி மற்றும் இலத்திரனியல் பாகங்களின் செயற்பாட்டில் சிறு தவறு ஏற்படும்போதே அவற்றினைக் கண்டறிந்து விடுவதால், இத்தவறுகளால் பாரிய விளைவுகள் ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றது.

இவ்வாறான சிறப்பம்சங்களுடன் கூடிய விண்ணோடங்களும் வான்கலங்களும் மனிதர்களின் பாதுகாப்பான நெடுந்தூர வான்வெளிப் பயணத்திற்கு வழிகோலும். அப்போது, நமது பால்வீதியையும் தாண்டி பயணிக்க விரும்பும் மனித இனத்தின் கனவு நனவாகும்.

-ஜெயசீலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆப்கானிஸ்தானில் இதுவரை 150 கனடிய படையினர் பலி

**2002ஆம் ஆண்டில் கனடியப் படையினர் ஆப்கானிஸ்தானில் பணியாற்ற முதன்முறையாக அனுப்பப்பட்டனர். அன்றிலிருந்து கடந்த மாதம் 25ஆம் திகதி வரை 150 பேர் பலியாகியுள்ளனர். ஜுன் 25ஆம் திகதி குண்டு வெடிப்பொன்றில் இரண்டு படையினர் இறுதியாகக் கொல்லப்பட்டனர்.**

---

### UN chief appoints...

From 1998-2001, she was also an acting Judge of the Witwatersrand High Court. She is widely regarded as an expert on transitional justice and has been a consultant to a number of governments, commissions and civil society organisations. She was appointed by the United Nations to the Sierra Leone Truth and Reconciliation Commission.

Prof Steven Ratner is the Bruno Simma Collegiate Professor of Law at tje University of Michigan Law School and in 1998-99, he was appointed by the UN Secretary-General to a three-person group of experts to consider options for bringing the Khmer Rouge to justice. His teaching and research focuses on public international law and on a range of challenges facing governments and international institutions, including ethnic conflict, border disputes, counter-terrorism strategies, and accountability for human rights violations. Professor Ratner has written and lectured extensively on the law of war, and is also interested in the intersection of international law and moral philosophy and other theoretical issues.

---

### Reconciliation...

body politic in progressively alienationg the Tamil people, giving the impression that it it was all their doing.


The credentials of the commission are itself suspect. The Commission is to be headed by the former attorney general whose record in the area of administration of justice when it comes to Tamil issues is far too dubious for any credence to be attached to the commission. He was largely responsible for impeding the course of justice in the special Presidential commission, another sham, appointed to inquire into the wanton killing of 18 Tamils working for the French INGO by the Special Task Force of the military and the killing of the 5 Tamil university students by the security forces in the east of Sri Lanka, making a mockery also of the committee of internationally eminent persons appointed to oversee the working of this commission. They, it would be recalled, disbanded themselves in frustration. Also, we are informed that as a state counsel he played a major role in preventing further action into the massacre of more than 50 Tamil remand prisoners suspected of being LTTE persons awaiting a judicial inquiry, tortured and bludgeoned to death by some "patriotic" Sinhalese prisoners, released for this purpose, who were also inmates of the Welikade prison the principal State prison in Sri Lanka, during the 1983 State sponsored Pogrom against the Tamils. Rajapakse could not have got a better chairperson.

The best that Mahinda Rajapakse can do to help in the reconciliation process is to abstain from shedding crocodile tears in public internationally and locally on the present plight and the misery of the Tamil people which only angers them rendering any spirit of reconciliation increasingly impossible. It would be unwise to underestimate the intelligence of the Tamil people even in their present state of mind.
[Editorial, Eelam Nation]


A1 கொழும்பு

டிஜிட்டல் போட்டோ
ஸ்ரூடியோ & வீடியோ

முதல் தரமானஅனைத்து
போட்டோ, வீடியோ படப்பிடிப்புகள்
எல்லா வகையான போட்டோ
வீடியோ வேலைகள்




From:
அல்பத்துடன் போட்டோ
PACKAGES

25 - 5X7 பிறந்த நாள் $125.00
150 - 5x7 அரங்கேற்றம் $750.00
50 - 5x7 பூப்புனித நீராட்டு விழா $250.00
75-5x7 திருமணவிழா $375.00
2 பாஸ்போட் 5 நிமிடத்தில் $5.00
2 சிற்றிசன் 5 நிமிடத்தில் $5.00
2 லான்டட் காட் 5 நிமிடத்தில்$5.00
2 அனைத்துவிதமான ஐ. டி. 5 நிமிடத்தில் $5.00
3 - 5X7 ஸ்ரூடியோ போட்டோ $15.00

ST-FRANCIS
L.L-3, 2296 EGLINTON AVE. E
@ BIRCHMOUNT ROAD
TORONTO, SCARBOROUGH, ON.

Cell: 416-752-4444
Tel: 416-755-2333
FAX: 416-755-4554

Web: www.tamilsyellowpages.com
E-Mail:www.typ@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

# JRB Universal Inc.

Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

• வீடு • காணி • வர்த்தகச் சட்டம்

The Law Offices of

**Yaso Sinnadurai**
Barrister & Solicitor, Notary Public

• Real Estate Law • Residential • Commercial Business Law

**Tel: 416 265 3456** **Fax: 416 265–2770**

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)

நான் ஒரு
வழக்கறிஞர்
இல்லை

*Motor Vehicle Accident*
*Criminal*

வாகன விபத்து!
கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..
உரிய




சட்ட
ஆலோசனைகளுக்கு
கலகலப்பு தீசன்

416-803-5296

WWW.KALAKALAPPU.NET


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sabesan's Choice!



விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும் நிலக் கம்பளம்
பொருத்தும் வேலைகளில்
தன்னிகரற்றவர்!

சபேசன்

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
பலன் புரியும்!

416 605 1990

## இது எப்படி...

பலரும் ஆங்கிலத்திலேயே உரையாற்றியபோது எல்லோரும் முகத்தை வளைத்துச் சுளித்தனர்.

சிவத்தம்பி சிறப்பு வருகை!

இலங்கையின் தமிழறிஞர் சிவத்தம்பியின் வருகையை எதிர்பார்த்து, "வருக சிவத்தம்பி...உருகுதே என் இதயம்" எனக் காத்திருந்தார் கருணாநிதி. அவரது காத்திருப்பு வீண்போகவில்லை:

விழாவில் சிவத்தம்பியிடம் விகடன் நிருபர் கேட்ட கேள்விக்கு அவர் அளித்த பதில் கவனிக்கப்பட வேண்டியது.

**கேள்வி:** முள்வேலி முகாம்களில் அடைபட்டுக் கிடக்கும் தமிழர்களின் நிலை எப்படி? அந்த மக்கள், இந்தச் செம்மொழி மாநாட்டை எப்படிப் பார்க்கிறார்கள்?

**பதில்:** அரசியல் விவகாரம் சம்பந்தமாக எதுவும் நாம் பேச வேண்டாம். இலங்கையில் உள்ள உள்நாட்டு விடயங்களை இன்னொரு நாட்டில் வந்து நான் பேசத் தயாராக இல்லை. அது பிழை என்று நினைக்கிறேன்".

எப்படி இருக்கிறது சிவத்தம்பியின் பதில்.

(விகடனில் வெளிவந்த விடயங்களின் சிறு தொகுப்பு )





நன்றி தமிழக சஞ்சிகைகள்

The Children's Education Trust of Canada
offered to the public by

Children's Education Funds Inc.



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற

சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Political transformation should start in Tamil Nadu
# Prof. P. Ramasamy

Political transformation of the Tamil mind at the global level starting with Tamil Nadu is a fundamental prerequisite for the achievement of Eelam, said Prof. P. Ramasamy, Deputy Chief Minister of the Penang State of Malaysia in an interview to TamilNet. Tamil Nadu should go beyond DMK or AIADMK to handle the global plight of Tamils. Tamil groups in Sri Lanka have no vision or capacity and some are goaded by India. Some in the West don't understand the historical and contemporary trajectory of the national liberation of Eezham Tamils. Discussing Tamil question with the Sinhala State is counter-productive at this stage, he further said, adding that he is presently working on exposing the misdeeds of India and the DMK and will push for international investigation of Sri Lanka's war crimes and India's strong role in them.



The UMNO government in Malaysia worked hand in hand with Sinhala racists. If our political coalition takes power at the federal level in Malaysia I will push for the recognition of Tamil Eelam, Prof Ramasamy said.

Prof. P. Ramasamy
Prof. Ramasamy argued for the necessity of a political transformation in Tamil Nadu since the common belief of global Tamils that Government of India and Tamil Nadu government would not forsake the interests of Tamils had been blasted by the genocide of Eezham Tamils in the military offensive last year.

"It is being realized now that Tamils cannot take the Tamil Nadu government or politics for granted. There is need for a complete transformation of politics in Tamil Nadu that would go beyond the alternatives of DMK or AIADMK. A new political alignment is called for to champion the global plight of Tamils including those in Sri Lanka."

"I think the politics of Seeman and others are beginning to shed some light on the need for paradigm shift in Tamil Nadu. Unless and until there is this political transformation for the progress of Tamils, a political solution for Tamils in Eelam would not materialize," he said.

The fear that an independent Eelam would affect the union between Tamil Nadu and India is unfounded. This is propaganda of some elements to marginalise the Eezham Tamil cause, Prof Ramasamy said.

Karunanidhi knows about this but contributed to the weakening of Tamil progressive forces and to the defeat of the LTTE because of his great opportunism, greed and crookedness, he said.

"Today, Tamil Nadu is led by a politician who has become extremely unpopular and he is classified as the second Eddappan of the 21st century," Prof Ramasamy further said. [Eddappan, a feudal chief, has gone on record in Tamil history as the traitor who betrayed Veera Paa'ndiya Kaddappomman, the last of the rulers of Tamil Nadu, in the fight against British colonialism].

In his opinion the TNA and the rest of the groups in Sri Lanka do not have the vision or capacity to address the Tamil question in the island. "Some of them are goaded by the Indian authorities to engage with the chauvinistic Sinhala state for political reasons," he said.

"Some of the groups in the west do not understand the historical and contemporary trajectory of the Tamil national liberation movement."

"Since the trajectory has passed from one stage to another, the international community has to perform its historical act to re-invigorate the Tamil quest for a decent homeland. Discussions with the Sinhala state on the Tamil question is counter-productive at this stage," Prof. Ramasamy said.


The armed option has gone but the quest for Tamil Eelam has not gone. In fact, the desire to create a political future for Tamils is greater than ever today, he said.

Prof Ramasamy is currently refused visa to go to India and will not be attending the Chemmozhi Maanaadu (World Classical Tamil Conference), convened by Tamil Nadu Chief Minister next week.


Commenting, he told TamilNet that the Indian authorities are concerned of his commitment to Tamil Eelam and are embarrassed when he talkes about Government of India and the Tamil Nadu Government abetting the genocide of Tamils in Sri Lanka.

"I never asked to be invited for the Chemmozhi Maanaadu. The Indian authorities are embarrassed of my views on Tamils and thus have taken the initiative to prevent me from going to India. I am not in the least bothered," he said. ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Dental Office




**SCARBOROUGH**

3852 Finch Ave. East,
Suite 204 & 303
Scarborough, ON.
Tel: 416 292 7004

**MISSISSAUGA**

3025 Hurontario St.,
Unit 102
Mississauga, ON
Tel: 905 270 7844

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை


தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

# NKS Draperies & Blinds



**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**



- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org